Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, FEBRUARY 8, 2022

செவ்வாய்க்கிழமை பெப்ரவரி 08, 2022 | ஒளி: 07 கதிர்: 226 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | விலை ரூ.10

## மடவளையில் மண்ணுக்குள் புதைந்து மூவர் மரணம்

■ சேஹ்ன் செனவிரத்ன

வத்தேகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மடவளை, மடிகே பிரதேசத்தில் மண்மேடு சரிந்து விழுந்ததில், மூவர் உயிரிழந்துள்ளனர். காப்பாற்றப்பட்ட மற்றுமொருவர், கட்டுகஸ்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று (07) பகல் இடம்பெற்றுள்ளது. நிர்மாணித்துக் கொண்டிக்கும் புதிய வீட்டுக்கு அருகில் மண் சரிவு ஏற்படும் அபாயம் தென்பட்டுள்ளது. அதற்கு மதில் கட்டுவதற்காக, அத்திவாரம் வெட்டிக்கொண்டிருந்த போதே, இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# ஆளும் கட்சிக் கூட்டத்தில் எதிர்க்கட்சி எம்.பி

ஆளும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்றக் குழுக்கூட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஆகியோர் தலைமையில் அலரிமாளிகையில் நேற்று (07) நடைபெற்றது.

இதில், ரிஷாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் பங்கேற்றிருந்தார்.

இவர், அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து வாக்கெடுப்புக்கு விடப்பட்டவேளையில், ஆளும் கட்சியுடன் இணைந்து ஆதரவாக வாக்களித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஆளும் கட்சிக் கூட்டத்தில், பாராளுமன்ற நடவடிக்கைகள் மற்றும் நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மின் நெருக்கடிக்குத் தீர்வு காணல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களைப் பயன்படுத்துதல், ஏற்றுமதிப் பொருளாதாரத்தை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இதன்போது விவாதிக்கப்பட்டன. எதிர்காலத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார். நாட்டின் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதற்காக நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டம் தொடர்பில் நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ விசேட விளக்கமளித்தார்.



கொரோனா தொற்றாளர் அதிகரிப்பால்

## வைத்தியசாலைகளில் இடவசதி இல்லை



இலங்கையில் கொரோனா தொற்றாளர்களின் திடீர் அதிகரிப்புக் காரணமாக வைத்தியசாலைகள், இடவசதி மற்றும் படுக்கைகள் இல்லாமல் இயங்குகின்றன என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார். கொழும்பில் நேற்று (07) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார். கடந்த இரண்டு வாரங்களில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை இரு மடங்காக அதிகரித்திருப்பதாக குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



தாக்குதல் விவகாரம்

## அருந்திகவின் மகன் உட்பட 9 பேருக்கு பிணை

களனி பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களை தாக்கிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோவின் மகன் உட்பட 9 சந்தேகநபர்களை வத்தளை நீதவான் நீதிமன்ற நீதவான் ஹெஷான் டி மெல், நேற்று (07) பிணையில் விடுவித்தார். சந்தேக நபர்களில் இருவர், நேற்றையதினம் (07) அடையாள அணிவகுப்பில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் சாட்சிகளால் அடையாளம் காணப்பட்டனர்.

தொடர்ச்சி P2

சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு

# 22 மாதங்களின் பின்னர் பிணை

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, 22 மாதங்களாக தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சட்டத்தரணி ஹிஜாப் ஹிஸ்புல்லாவை பிணையில் விடுவிக்குமாறு, மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (07) கட்டளையிட்டது.

இந்தப் பிணை கட்டளையை சிலாபம் மேல் நீதிமன்றத்தில் முன்வைக்குமாறும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தன்னை பிணையில் விடுவிக்குமாறு சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா, தாக்கல் செய்த திருத்திய பிணை மனு, நேற்று(07) அழைக்கப்பட்டது.



அதன்போது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான விஜேசுந்தர, நீல் இத்தேவல ஆகியோர் அடங்கிய குழாம் மேற்கண்ட கட்டளையைப் பிறப்பித்தது.

ஹிஜாஸ் ஹிஸ்புல்லா, 2020 ஏப்ரல் மாதம் 14ஆம் திகதியன்று கைது செய்யப்பட்டார். புத்தளத்தில் உள்ள மதரஸா பாடசாலையில் மாணவர்களுக்கு மதவெறுப்பு போதனைகளை நடத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ், அவர் கைது செய்யப்பட்டார்.

22 மாதங்களுக்குப் பின்னர், சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ், புத்தளம் மேல் நீதிமன்றத்தில், சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குத் தொடர்பிலேயே பிணை வழங்குமாறு, அவரது சட்டத்தரணிகள் சிலாபம் மேல் நீதிமன்றத்தில் இரண்டு தடவைகள் பிணை கோரிக்கையை முன் வைத்திருந்தனர்.

தொடர்ச்சி P2

இலங்கையில்

## எரிபொருள் விலையை நிர்ணயிக்கிறது ஐ.ஓ.சி



இலங்கையில் எரிபொருள் விலையை நிர்ணயிக்கும் அதிகாரம் தற்போது இந்திய எண்ணெய் நிறுவனமான ஐ.ஓ.சி இருப்பதாக தொழிற்சங்கவாதியான ஆனந்த பாலித தெரிவித்தார். கொழும்பில் நேற்று (07) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், இலங்கை மின்சார சபை, ஐ.ஓ.சியிடம் எரிபொருள் கோரியதன் விளைவாக, இலங்கையில் மின்சார கட்டணத்தை தீர்மானிக்கும் அதிகாரத்தை ஐ.ஓ.சி பெற்றுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். இவை அனைத்தும் திருகோணமலை எண்ணெய் தாங்கி பண்ணையை எரிசக்தி அமைச்சர் இந்தியாவுக்கு குத்தகைக்கு வழங்கியதன்

தொடர்ச்சி P2

## அரசாங்கத்திடம் மனச்சாட்சி உள்ளதா?

### காவிந்த கேள்வி; அடம்பிடிப்பது ஏன்?

பொருளாதார ரீதியில் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கும் நேரத்தில், எரிபொருளின் விலையையும் அதனூடாக ஏனைய பொருட்களின் விலையையும் அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதென தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன, அரசாங்கத்துக்கு மனசாட்சியொன்று உள்ளதா எனக் கேள்வி எழுப்பினார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (07) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், ஒரு புறம் கம்மன்பில இந்த நாட்டுக்கு உண்மையை கூறுமாறு கோரியிருக்கின்றார்.



தொடர்ச்சி P2



## இருதரப்பு உறவுகள் குறித்து இருவரும் பேச்சு

இந்தியாவுக்கான இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி எல் பீரிஸ், இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ் ஜெய்சங்கரை புதுடெல்லியில் நேற்று (07) சந்தித்து, இருதரப்பு கலந்துரையாடலில் ஈடுபட்டார். இலங்கையை வலுப்படுத்துவதற்கான பொருளாதார முதலீட்டு முயற்சிகள் தொடர்பில் இரு தரப்பினரும் கலந்துரையாடியதுடன், மீனவர்கள் விவகாரம் குறித்தும் கருத்துகளை பரிமாறிக் கொண்டனர். இலங்கையின் எரிசக்தி பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான மேலதிக நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தும் வகையில் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றதாக அமைச்சர் ஜெய்சங்கர், தனது டுவிட்டர் பதிவில் நேற்று (07) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## எரிபொருள் விலையை கூட்டுத்தாபனம் அதிகரிக்காது

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், எரிபொருள் விலையை அதிகரிக்காது என்று தெரிவித்த எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, மசகு எண்ணெய் விலை அதிகரிப்பால் கூட்டுத்தாபனத்துக்கு ஏற்படும் நட்டத்தை முடிந்தவரை பொறுத்துக் கொள்ளமுடியும் என்றும் தெரிவித்தார். லங்கா இந்தியன் ஒயில் நிறுவனத்தின் எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பில் எரிசக்தி அமைச்சரிடம்



தொடர்ச்சி P2

தமிழக மீனவர்களின் படகுகளை

## ஏலம் விடுதல் ஆரம்பம்

இலங்கை கடற்படை பறிமுதல் செய்த தமிழ்நாடு மீனவர்களின் 105 விசைப்படகுகளை ஏலம் விடும் பணிகள் நேற்று (07) ஆரம்பிக்கப்பட்டன.

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக பறிமுதல் செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் விசைப்படகுகளே இவ்வாறு ஏலத்தில் விடப்பட்டுள்ளன.

2015ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை, எல்லை தாண்டி மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் இலங்கை கடற்படையினரால்,

தொடர்ச்சி P2



## சபையைக் கூட்டும் கூட்டத்தில் 3 முக்கிய தலைகள் இல்லை

கொரோனா பரவல் அதிகரித்துள்ள போதிலும், இந்த வாரம் நான்கு நாள்களுக்கு (இன்று முதல் வெள்ளிக்கிழமை 11 ஆம் திகதி வரை) பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கு பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு, நேற்று (07) தீர்மானித்தது.

பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு, பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தலைமையில் பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் நேற்று பிற்பகல் கூடிய போதே மேற்குறிப்பிட்ட தீர்மானம் எடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## பகிஷ்கரிப்பதற்கு காலம் உள்ளது

பணிபகிஷ்கரிப்பை முன்னெடுப்பது தொழிற்சங்கங்களின் உரிமை எனத் தெரிவித்துள்ள கொழும்பு பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் முருதொட்டுவே ஆனந்த தேரர், ஆனால் பணிபகிஷ்கரிப்பை முன்னெடுப்பதற்கு எனப் பொருத்தமான நேரம், காலம் உள்ளது என்றார்.

தொடர்ச்சி P2

## தீர்மானிக்கும் அதிகாரம் ஐ.ஓ.சியிடம் சென்றுள்ளது



தற்போது இலங்கையின் எரிபொருள் விலையை அரசாங்கமோ, எரிபொருள் கூட்டுதாபனமோ தீர்மானிப்பதில்லை எனத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, இனிமேல் இலங்கையில் எரிபொருள் விலையைத் தீர்மானிப்பது இந்தியாவின் ஐ.ஓ.சி நிறுவனமே என்றார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (7) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், ஐ.ஓ.சி நிறுவனம் முதலில் எரிபொருள் விலையை அதிகரிக்கும் எனத் தெரிவித்த அவர், பின்னர் சிபெட்கோ நிறுவனமும்

தொடர்ச்சி P2

## 18 வயதில் பாலியல் துஷ்பிரயோகம்; 21 வருடங்களின் பின்னர் விசாரணை

18 வயதான யுவதியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினர் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட இருவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை, புதிதாக விசாரணைக்கு உட்படுத்துமாறு நுவரெலியா மேல் நீதிமன்றம் நேற்று (07) உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த வழக்கு, 21 வருடங்களின் பின்னர், புதிதாக விசாரணைக்கு உட்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

இந்த வழக்கு இன்னும் தீர்க்கப்படாததால், இந்த வழக்கை தினசரி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு நுவரெலியா மேல் நீதிமன்ற நீதிபதி தர்ஷிகா விமலசிறி, நேற்று (07) அறிவுறுத்தினார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 22 மாதங்களின் பின்னர் பிணை

அவ்விரு கோரிக்கைகளும் நிராகரிக்கப்பட்டன.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் 15(2) பிரிவின் கீழ், பிணை வழங்குவதற்கு மேல் நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை. ஆகையால், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அவரது சட்டத்தரணிகள் பிணை மனுவைத் தாக்கல் செய்தனர்.

சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா தொடர்பிலான பிணை தொடர்பிலான கட்டளையை பெப்ரவரி 7ஆம் திகதியன்று பிறப்பிப்பதாக, பெப்ரவரி 2ஆம் திகதியன்று மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்திருந்தது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு எதிராக, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நடத்தியவர்களுக்கு உதவி ஒத்துழைப்பு நல்கியமை, மக்களுக்கு இடையில் மத ஒற்றுமையை சீர்குலைக்கும் வகையில் போதனைகள் நடத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன.

கைது செய்யப்பட்ட 18 மாதங்களுக்கு கூடுதலாக வழக்குத் தாக்கல் செய்யாது, தடுத்துவைத்தல் கட்டளையின் கீழ், குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்தார்.

சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு எதிரான வழக்குத் தொடர்பில், கடுமையான விமர்சனங்கள் உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியில் விடுக்கப்பட்டன. அவரை தடுத்துவைத்தலில் இருந்து விடுவிக்குமாறும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன.

இந்நிலையில், ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவினால் தாக்கல் செய்யப்பட்ட திருத்தப்பட்ட பிணை மனு, ஜனவரி 20ஆம் திகதியன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, பிணை வழங்குவதில் எவ்விதமான ஆட்சேபனையும் இல்லையென, மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு சட்டமா அதிபர் சார்பில் ஆஜராகியிருந்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல் அறிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே 22 மாதங்களாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா, பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

## மடவளையில் மண்ணுக்குள் புதைந்து மூவர் மரணம்

மண்ணுக்குள் புதையுண்ட நால்வருள் மூவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

அங்கு வேலை செய்து கொண்டிருந்த நால்வரும் மண்ணில் புதையுண்ட நிலையில், அத்தனை பேரும் காப்பாற்றப்பட்டு, கட்டுகஸ்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அதில், மூவர் மரணித்துவிட்டனர். மற்றுமொருவர் கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

## வைத்தியசாலைகளில் இடவசிதி இல்லை

ஏனைய நோயாளிகளுக்கு ஏற்படும் அசௌகரியத்தைத் தவிர்ப்பதற்காக, 14,000 படுக்கைகள் தயார்நிலையிலும் 6,000 படுக்கைகள் பயன்பாட்டிலும் உள்ளதாகவும் கொரோனா நோயாளிகளுக்கான ஏற்பாடுகளை வைத்தியசாலைகள் தொடர்ந்தும் மேற்கொண்டு வருவதாகவும் கூறினார்.

கொரோனா நோயாளிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 70 அதி தீவிர சிகிச்சைப் பிரிவின் படுக்கைகளில், 59 படுக்கைகள் மாத்திரமே பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவித்தார்.

தொற்றாளர்களின் அதிகரிப்பு ஒரு நல்ல அறிகுறி அல்ல என்று குறிப்பிட்ட அவர், தொற்று பரவுவதைத் தடுக்க அனைவரும் தமக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, கடந்த சில தினங்களில் கொரோனா தடுப்பூசியின் பூஸ்டர் டோஸைப் பெற்றுக்கொள்வதில் பொதுமக்களிடத்தில் ஆர்வம் அதிகரித்துள்ளதாக குறிப்பிட்ட அவர், நாளாந்தம் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் தடுப்பூசியினை பெறுவதற்காகத் தடுப்பூசி மையங்களுக்கு பிரவேசிப்பதாகக் குறிப்பிட்டார்.

## ஏலம் விடுதல் ஆரம்பம்

தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டும் அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்பட்டும் உள்ளன.

இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்டுள்ள 105 படகுகள் நீதிமன்ற உத்தரவின்படி ஏலம் விடப்படுமென இலங்கை அரசாங்கம் அறிவித்திருந்தது. இதற்கு தமிழக மீனவர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் பலர் கடும் எதிர்ப்பை பதிவு செய்தனர்.

இந்த எதிர்ப்பையும் மீறி தமிழக மீனவர்களின் விசைப்படகுகளை ஏலம் விடும் பணியை இலங்கை அரசாங்கம் இன்று தொடங்கியது. அரசுடைமையாக்கப்பட்ட 105 படகுகளில் 65 படகுகளை காரைநகரில் ஏலம் விடும் பணி நடைபெற்று வருகிறது.

## இருதரப்பு உறவுகள் குறித்து இருவரும் பேச்சு

பொருளாதார மீட்சிக்கு சுற்றுலாத்துறையின் முக்கியத்துவத்தை இரு அமைச்சர்களும் கலந்துரையாடியதுடன், அதிக இணைப்பின் மூலம் மக்களுடனான மக்கள் தொடர்புகளின் முக்கியத்துவம் தொடர்பிலும் கவனம் செலுத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் புதிடெல்லியை சென்றடைந்த அமைச்சர் பீரிஸ், இந்த பயணத்தின் போது, வெளியுறவு செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவை சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அருந்திகவின் மகன் உட்பட 9 பேருக்கு பிணை

காணப்பட்டனர்.

பெப்ரவரி 2ஆம் திகதி இடம்பெற்ற இந்த தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த மருத்துவ மாணவர்களில் மூவர் கொழும்பு வடக்கு (ராகம) போதனா வைத்தியசாலையிலும் ஒருவர் நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

அதில் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மாணவரின் நண்பரான முன்னாள் இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோவின் மகன் உட்பட 9 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இரண்டு மாணவர் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலின் போது ஒரு குழுவுக்கு ஆதரவாக சுமார் 15 வெளி நபர்கள் வந்து தாக்குதலில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில், தனது சட்டத்தரணியூடாக பொலிஸில் சரணடைந்த பின்னர் முன்னாள் இராஜாங்க அமைச்சர் பெர்னாண்டோவின் மகன் கைது செய்யப்பட்டு, அடையாள அணிவகுப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டு நேற்று (07) வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இதேவேளை, தாக்குதல் சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட வாகனம் ஒன்று களுபோவில பிரதேசத்தில் வைத்து ராகம பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது என்று கடந்த அமர்வில் மன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

இதேவேளை, தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட கார், தென்னை அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமானது எனத் தெரிவித்த அமைச்சின் செயலாளர் திஸ்ஸ ஹேவாவிதாரண, இது தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு தென்னை அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்திருந்தார்.

வாகனத்தை செலுத்திய சாரதி, தென்னை அபிவிருத்தி அதிகார சபையின் சாரதி அல்ல என்றும், இராஜாங்க அமைச்சரின் தனிப்பட்ட சாரதி என்றும் அவர் மேலும் குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அரசாங்கத்திடம் மனசாட்சி உள்ளதா?

அப்படியாயின் இவ்வளவு நாள்களும் இந்த அரசாங்கம் நாட்டுக்கும் மக்களுக்கும் பொய்யே கூறியுள்ளது.

அரசாங்கத்தின் அமைச்சரொருவர் இப்போதாவது இந்த நாட்டுக்கு உண்மையை கூறுமாறு கூறுவார் என்றால், இந்த நிமிடம் வரை இந்த அரசாங்கம் மக்களுக்கு பொய்யே கூறுகின்றதென நாங்கள் நம்பலாம். இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லமாட்டோம் என்று அடம்பிடிக்கின்றது. ஆனால் பாகிஸ்தான் ஐ.எம்.எப்.பிடம் சென்றது, மத்திய வங்கியை சுயாதீனமாக்குங்கள், அரசியல் நோக்கங்களோடு வழங்கப்பட்டுள்ள நிவாரணம், வரி என்பவற்றை நீக்குமாறு பாகிஸ்தானிடம் சர்வதேச நாணய நிதியமானது கூறியுள்ளது.

அப்படியான உத்தரவை சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு கூறினால் இவர்களால் அதனை செயற்படுத்துவார்களா? இல்லை அதனை செயற்படுத்தினால் இவர்களால் திருட முடியாது. மோசடி செய்ய முடியாது. அதனால்தான் அங்கு செல்லமாட்டோமென தெரிவிக்கின்றார்களா எனவும் கேட்டார்.

## பகிஷ்கரிப்பதற்கு காலம் உள்ளது

சுகாதார தொழிங்சங்கள் நேற்று (7) முன்னெடுத்த சுகயீன விடுமுறை பணிபகிஷ்கரப்பு தொடர்பிலேயே அவர் ஊடகங்களுக்கு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

இன்று நாம் இருக்கும் பொருளாதார சிக்கல்களுக்கு மத்தியில், தொற்று வேகமாகப் பரவும் நேரத்தில் நாம் எமது கடமைகளை காட்டிகொடுத்து, எமது உரிமைக்காக மாத்திரம் போராடுவோமானால் இது அரச சேவை பணியாளர்களுக்கான நல்ல விடயமல்ல.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி, சுகாதார அமைச்சர், ஜனாதிபதியின் செயலாளர் உள்ளிட்டவர்கள் தன்னுடன் தொலைபேசியில் உரையாடியதாகவும் எமக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை ஒரு மாதத்துக்குள் நிறைவேற்றுவதாக உறுதியளித்துள்ளனர் என்றார்.

அத்துடன் எதிர்வரும் ஒரு மாதத்துக்குள் தாதியர் பல்கலைக்கழகத்தை ஆரம்பிக்கவுள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார் என்றார்.

எனவே, இந்த விடயங்கள் குறித்து எமக்கு நம்பிக்கை இருக்க வேண்டும். தாதியர் சங்கம் என்ற ரீதியில் எமக்கு அந்த நம்பிக்கை உள்ளது. எனவே தாதியர் தொழிற்சங்கம் இந்த விடயம் தொடர்பில் எவ்வித சந்தேகத்தையும் கொள்ள கூடாது. நாம் பொய் வாக்குறுதிகளை வழங்கவில்லை.

ஜனாதிபதியோ, சுகாதார அமைச்சரோ, செயலாளரோ எம்மிடம் பொய் வாக்குறுதிகளை வழங்கவில்லை. ஆனால் இந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு இடையில் சில தடைகள் ஏற்படுகின்றமையே அவற்றை நிறைவேற்றாமைக்கு காரணம் என்றார்.

யார் எந்த சுகாதார தரப்பினர் பணிபகிஷ்கரிப்பை மேற்கொண்டாலும் தாதியர் தொழிற்சங்கமானது, கருணை, இரக்கம் என்பவற்றை மனதில் வைத்து, இந்த தேசிய அனர்த்த நிலைமைக்கு மத்தியில் நோயாளர்கள் குறித்து அதிகம் அவதானம் செலுத்துமாறும் தாதியர்களின் தேவைகளை தாம் பூர்த்தி செய்வதாகவும் தெரிவித்துள்ளார்.

தான் தாதியர் குறித்தே கதைப்பதாகவும் ஏனைய சுகாதார தொழிற்சங்கங்கள் குறித்து தான் கவனம் செலுத்தவில்லை. இந்த தொழிற்சங்க நடவடிக்கை என்பது தாதியர் தரப்பில் தோல்வியடைந்துள்ளது என்றார்.

## எரிபொருள் விலையை கூட்டுத்தாபனம் அதிகரிக்காது

நேற்று (07) வினவிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார். கடந்த மாதம் முதல் டீசல் லீற்றர் ஒன்றுக்கு 35 ரூபாயும் பெற்றோல் லீற்றருக்கு 7 ரூபாயும் நஷ்டமடைந்து வருவதாகவும் மசகு எண்ணெய் விலை மேலும் உயர்ந்தால் நஷ்டம் மேலும் அதிகரிக்கும் என்றும் குறிப்பிட்டார்.

டிசெம்பர் மாதத்தில் ஒரு பரல் மசகு எண்ணெயின் விலை 74 டொலராக இருந்த போதிலும், கடந்த வார இறுதியில் ஒரு பரல் மசகு எண்ணெயின் விலை கடுமையாக உயர்ந்து 93 டொலரைத் தாண்டியுள்ளது என்றார்.

மசகு எண்ணெய் விலை உயர்ந்த போதிலும், எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கான எந்த தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்டார்.

கொழும்பிலும் அதனைச் சூழவுள்ள பெற்றோலிய கூட்டுத்தாபன எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்றுமுன்தினம் வாகன நெரிசல் காணப்பட்டதுடன், சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 92 ஒக்டேன் பெற்றோலுக்கு தட்டுப்பாடு காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## எரிபொருள் விலையை நிர்ணயிக்கிறது ஐ.ஓ.சி

விளைவுகளாகும் என குறிப்பிட்டார்.

எரிசக்தி அமைச்சரின் ஒப்பந்தங்களால், அரசுக்கு சொந்தமான மின் உற்பத்தி நிலையங்களின் கட்டுப்பாட்டை நாடு இழக்க வழிவகுக்கும் என்று தெரிவித்த அவர், எரிபொருள் விலையை கட்டுப்படுத்தவும், நிர்ணயிக்கவும், மின் கட்டணத்தை நிர்ணயிக்கவும் இந்திய நிறுவனத்துக்கு அதிகாரம் வழங்கப்படும் என்றும் எச்சரித்துள்ளோம் என்றார்.

ஐ.ஓ.சியின் எரிபொருள் விலையேற்றத்தைத் தொடர்ந்து ஆரம்ப எச்சரிக்கைகள் சரியானவை என நிரூபிக்கப்பட்டுள்ளதாக தொழிற்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதற்கு முன்னர் மூன்று தடவைகள் ஐ.ஓ.சி எரிபொருட்களின் விலையை உயர்த்திய போது, எரிபொருளின் விலைகளை அதிகரிப்பதற்கான தீர்மானத்தை தாங்கள் எடுக்கவில்லையென அமைச்சரும் ஏனைய அதிகாரிகளும் கூறியதாகவும் பாலித சுட்டிக்காட்டினார்.

### தீர்மானிக்கும் அதிகாரம் ஐ.ஓ.சியிடம் சென்றுள்ளது

எரிபொருள் விலையை அதிகரிக்கும். மக்களின் வாழ்க்கைச் செலவு நாளுக்கு நாள் அதிகரிக்கும் நிலைக்கு மத்தியில், மின்சக்தி அமைச்சர் நேரடியாக இந்தியாவிலிருந்து எரிபொருளை இறக்குமதி செய்யப் போகின்றார் என்றார்.

எனவே இவ்வாறு இந்தியாவிலிருந்து எரிபொருளை இறக்குமதி செய்கின்றமையானது, அதிக விலைக்கா அல்லது குறைந்த விலைக்கா என கேள்வி எழுப்பிய அவர், அப்படியாயின் நேற்று முன்தினம் இந்தியாவுடன் கலந்துரையாடிய பின்னரா எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டது என்றார்.

ஒரு புறம் மின்சக்தி அமைச்சர் மின் துண்டிப்பு இடம்பெறாது என்கிறார் மறுபுறம் நுகர்வோர் அதிகார சபையோ தம்மிடம் அறிவுறுத்திய பின்னர் தான் மின் துண்டிப்பு இடம்பெற வேண்டும் என்கின்றனர். ஆனால் இருவரும் பெயில். ஜனாதிபதியைப் போல் எரிசக்தி அமைச்சரும் பெயில், மின்சக்தி அமைச்சர், நுகர்வோர் விவகார அமைச்சரும் பெயில்.

நாட்டு மக்களுக்கு தேவையான உணவுப் பொருள்களை பணம் கொடுத்து கூட பெறமுடியாத நிலைக்கு வர்த்தக நிலையங்கள் வெறுமையாகியுள்ளன. இன்று மக்கள் மருந்து இல்லாமல் மரணிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

## சபையைக் கூட்டும் கூட்டத்தில் 3 முக்கிய தலைகள் இல்லை

அரசாங்க நிதி பற்றிய குழு மற்றும் இலங்கையில் பாலின ஒப்புரவு மற்றும் சமத்துவத்தை உறுதி செய்தல் மற்றும் பெண்களின் உரிமை மீறல்கள் குறித்து சிறப்பு கவனம் செலுத்துவதற்கும், இதன் பரிந்துரைகளை பாராளுமன்றத்துக்கு அறிக்கையிடுவதற்குமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற விசேட குழு 08ஆம் திகதி கூடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தக் கூட்டத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகிய மூவரும் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# 18 வயதில் பாலியல் துஷ்பிரயோகம்; 21 வருடங்களின் பின்னர் விசாரணை

இந்த வழக்கை மார்ச் 15, 16 மற்றும் 24 ஆகிய திகதிகளில் விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு உத்தரவிட்ட நீதிபதி, வழக்குடன் தொடர்புடைய அனைத்து தரப்பினரையும் குறித்த திகதிகளில் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நோட்டீஸ் அனுப்பிவைக்குமாறு கட்டளையிட்டார்.

18 வயதில் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட யுவதிக்கு 38 வயதாகிறது. அதுமட்டுமன்றி அப்பெண் இரண்டு பிள்ளைகளின் தயாராவார்.

தலவாக்கலை பிரதேசத்தில் உள்ள தேவாலயத்திற்கு, 2001ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் சென்றுவிட்டு வீடு திரும்பிய போது, யுவதியை கடத்திச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் இரண்டு சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு, 2001 ஆம் ஆண்டு முதல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர், சட்டமா அதிபரால் நுவரெலியா மேல் நீதிமன்றில் 2004 ஆம் ஆண்டு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

மூன்று குற்றச்சாட்டுகளை முன்வைத்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், ஒரு குற்றச்சாட்டுக்கு தலா 5 வருடங்கள் சிறைத்தண்டனையும், இந்த வழக்கில் இரண்டாவது மற்றும் மூன்றாவது குற்றச்சாட்டுகளுக்காக 18 வருட கடூழிய சிறைத்தண்டனையும் 10 வருடங்களின் பின்னர் விதித்து, நுவரெலியா மேல்நீதிமன்றம் 2015 ஆம் ஆண்டு தீர்ப்பளித்தது.

இதனையடுத்து தங்களுக்கு விதிக்கப்பட்ட சிறைத்தண்டனைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சந்தேகநபர்கள் மேன்முறையீடு செய்திருந்தனர்.

இந்த வழக்கு ஜூரிக்கு முன்பாக விசாரிக்கப்பட்டதா என்பது தெளிவாகத் தெரியாததால், மேன்முறையீட்டு நீதிமன்றம் தண்டனையை இடைநிறுத்தியதுடன், நுவரெலியா மேல் நீதிமன்றத்திற்கு விசாரணையை ஆரம்பத்திலிருந்து மீண்டும் தொடங்குமாறு அறிவுறுத்தியது.

அதன்பின்னர், மேற்படி வழக்கின் விசாரணையில் ஈடுபட்டிருந்த நீதிபதிகளில் ஒருவர் விசாரணையில் இருந்து விலகினார்.

குறித்த வழக்கு நேற்று (07) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே, நுவரெலியா மேல் நீதிமன்ற நீதிபதி தர்ஷிகா விமலசிறி இந்த வழக்கை தொடர்ந்தும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு உத்தரவிட்டார். வழக்குடன் தொடர்புடைய அனைத்து தரப்பினருக்கும் நோட்டீஸ் அனுப்புமாறு உத்தரவிட்டார்.

மாணவர்களுக்கு தடுப்பூசி;

# தேவையற்ற பயம் அவசியமற்றது



தடுப்பூசிகளை செலுத்திகொண்ட கொழும்பு மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு, எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை எனத் தெரிவிக்கும் கொழும்பு மாவட்டப் பாடசாலைகளுக்கான சுகாதார காரியாலயத்தின் தலைவர் வைத்திய சி.எம்.ஜயலத், தடுப்பூசிகள் தொடர்பில் தேவையற்ற பயம் கொள்வது, அவசியமற்றது எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், 11 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசிகள் செலுத்தும் பணிகள், பிரதான பாடசாலைகளில் நிறைவடையும தருவாயில் இருக்கிறது. எவ்வாறாயினும் சில பாடசாலைகளில் சில குறைபாடுகள் காணப்படுகின்றன.

கொழும்பில் உள்ள பாடசாலைகளில் தடுப்பூசிகளை செலுத்தும்போது, எந்தவொரு மாணவருக்கும் பிரச்சினைகள் ஏற்படவில்லை. குறைந்தது எவரும் வைத்தியசாலையில்கூட அனுமதிக்கப்படவில்லை.

குறிப்பாக, தடுப்பூசிகளை செலுத்திகொண்டு, வீடுகளுக்கு சென்ற மாணவர்களுக்கும் எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை. வீடுகளுக்கு சென்றதன் பின்னர், நோய்வாய் பட்டதாகவோ அல்லது அவர்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டதாகவே எந்தவிதமான சம்பவங்களும் பதிவாகவில்லை.

எனவே 11 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு தடுப்பூசிகளை செலுத்துவதால் எந்தவிதமானப் பிரச்சினைகளும் ஏற்படாது. இது தொடர்பில் தேவையற்ற வகையில் பயம் கொள்வது அவசியமற்றது எனவும் பாடசாலைகளுக்கான சுகாதார காரியாலயத்தின் தலைவர் வைத்திய சி.எம்.ஜயலத் தெரிவித்தார்.

பெற்றோல் விலை அதிகரிப்பால்

# மின்கட்டணமும் அதிகரிக்கும்




பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் எரிபொருளின் விலையை அதிகரிக்கும் என தெரிவிக்கும் மின்சாரத்துறை சேவை தொழிற்சங்கத்தின் தலைவர் ரஞ்சன் ஜயலால், இதனூடாக மின்சாரக் கட்டணங்களும் அதிகரிக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் எரிபொருள் விலையை அதிகரித்துள்ள நிலையில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் எரிபொருளின் விலையை அதிகரிக்குமென எதிர்பார்க்கவில்லை என அரசாங்கம் கூறியுள்ளது.

அரசாங்கம் இவ்வாறு கூறுமாக இருந்தால், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் எரிபொருள் விலையை நிச்சயம் அதிகரிக்கும் என்கிற எதிர்பார்ப்பில் மக்கள் இருக்க வேண்டும் என்றார்.

எரிபொருள் விலையை மீண்டும் அதிகரித்து, அதனூடாக மின்சாரத்தின் விலையையும் அதிகரிப்பார்கள். நாட்டு மக்களுக்குத் தொடர்ந்து சுமைகளை அதிகரிக்கும் நிலையே நாட்டில் ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

# வீதி விபத்துகளை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

ஜோன்ஸ்டன் பணிப்புரை



இலங்கையில் தற்போது வீதி விபத்துகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, 2020ஆம் ஆண்டைவிட 2021ஆம் ஆண்டு, வீதி விபத்துகளின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும், அதிவேக நெடுஞ்சாலைகளில் ஏற்படும் விபத்துகளை ஆறு மாதங்களுக்குள் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிந்தக குணரத்னவுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

2021ஆம் ஆண்டில், பின்னதுவ, அபரெக்க, குருந்துகஹஹெதக்ம, அங்குனகொலபெலஸ்ஸ, அதுருகிரிய, களனிகம ஆகிய அதிவேக நெடுஞ்சாலைகளில் 07 விபத்துகள் இடம்பெற்றுள்ளன. இந்த விபத்துகளால் ஒன்பது பேர் உயிரிழந்துள்ளனர். 2021 ஆம் ஆண்டில் மொத்த வீதி விபத்துகளின் எண்ணிக்கை 461 ஆகும்.

2020ஆம் ஆண்டில், நெடுஞ்சாலைகளில் இடம்பெற்ற மொத்த வீதி விபத்துகளின் எண்ணிக்கை 308 ஆகும். 2020 ஆம் ஆண்டில், களனிகம, குருந்துகஹஹெதக்ம ஆகிய இடங்களில் ஐந்து அபாயகரமான வீதி விபத்துகள் இடம்பெற்றுள்ளதுடன் அவற்றில் 05 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதிவேக நெடுஞ்சாலைகளில் அதிகளவான விபத்துகள், சாரதிக்கு உறக்கம் ஏற்பட்டதன் காரணமாக நிகழ்ந்துள்ளன. அதிவேக வீதிகளில் ஓய்வறைகளை அமைப்பது தொடர்பில் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கவனம் செலுத்தியுள்ளார்.

# போராட்டம் தோல்வி



சுகாதார சேவையில் ஈடுபடும் தொழிற்சங்கங்களின் வேலைநிறுத்தப் போராட்டம் தோல்வியடைந்து உள்ளதாக அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் தலைவர் முருந்தெடுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

தாதியர்கள் தொடர்ந்து சேவையில் ஈடுபட்டு வருகிறார்கள். ஆனாலும், சில இடங்களில் பல்வேறு அழுத்தங்களை அவர்களுக்கு வழங்கி வருகிறார்கள். குறிப்பாகப் பணிகளுக்கு செல்லும் தாதியர்களுக்கு, சில இடங்களில் நிறுவன தலைவர்களால் அழுத்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோல, பல தலைவர்கள் ஊடாகவும் அழுத்தங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், பணிகளுக்குச் செல்லும் தாதியர்கள், அழுத்தங்கள் காரணமாக திருப்பியனுப்பப்பட்டுள்ளனர். தொடர்ந்து அரச தாதியர்கள் பணிகளில் ஈடுபடுவார்கள். ஆனால், அவர்களுக்கு அழுத்தங்கள் வழங்கப்படுகின்றன. இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் இதன்போது கூறினார்.

# கூரிய ஆயுதங்களுடன் நால்வர் கைது

வெரகொடெல்ல பிரதேசத்தில் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் திட்டமிட்ட குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது சந்தேகநபர்களிடமிருந்த 04 வாள்களும் இரு கத்திகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. வெல்லம்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 29,35,39,52 ஆகிய வயதுடைய சந்தேகநபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், ஏதேனும் குற்றச் செயல்களுடன் தொடர்பு பட்டவர்களா என்பது தொடர்பிலான விசாரணைகளையும் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் ஆரம்பித்துள்ளனர்.



வேலை நிறுத்தத்துக்குப் பின்னால்

# அரசியல் நோக்கம்



சுகாதார சேவை தொழிற்சங்களின் வேலை நிறுத்தமானது, அரசியல் நோக்கம் கொண்டதென அரச வைத்திய அதிகாரிகள் ஒன்றியத்தின் தலைவர், ரூக்ஷான் பெல்லென தெரிவித்தார்.

நாட்டு மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வரும் இந்நிலையில், வேலைநிறுத்தப் போராட்டங்களை முன்னெடுப்பது, அரசியல் நோக்கங்களுக்காகவே அன்றி வேறெதுவும் இல்லை எனவும் தெரிவித்தார்.

சுகாதார சேவை ஊழியர்களை தனியார் மயப்படுத்துவதற்கான காலம் வந்துவிட்டது. நோயாளர்களின் உரிமைகளை பறிக்கும் இதுபோன்ற போராட்டங்களுக்கு எதிராக, ஒன்றிணைய வேண்டும் எனவும் அவர் இதன்போது கூறினார்.

# மீண்டும் தலைவராக தெரிவு



தாய்லாந்து இராச்சியத்திற்கான இலங்கைத் தூதுவரும், யுனெஸ்கெப்பின் நிரந்தரப் பிரதிநிதியுமான சி.ஏ. சமிந்தா ஐ. கொலொன்ன, ஆசிய இடர் தயார்நிலை நிலையத்தின் துணைத் தலைவராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

துணைத் தலைவராக இணையவழியில் கூட்டத்தில் இணைந்த தூதுவர் கொலொன்ன, கோவிட்-19 தொற்றுநோய்களின் சவால்களுக்கு மத்தியில் ஆசிய இடர் தயார்நிலை நிலையம் கடந்த ஆண்டு முழுவதும் மேற்கொண்ட பணிகளுக்காக அந்நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஹான்ஸ் குட்மேன் மற்றும் அந்நிலையத்தின் உறுப்பினர்களுக்கு பாராட்டுகளைத் தெரிவித்தார்.

ஆசிய இடர் தயார்நிலை நிலையத்தின் தலைமைப் பதவி, பங்களாதேஷில் இருந்து கம்போடியாவுக்கு மாற்றப்பட்டது. மேலும் கம்போடியாவின் சபை உறுப்பினர் மற்றும் கம்போடியாவின் இடர் முகாமைத்துவத்திற்கான தேசிய குழுவின் ஆலோசகர் கிம் விரக் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# அலரி மாளிகையில் ஆளுங்கட்சி கூட்டம்



ஆளுங்கட்சி உறுப்பினர்கள் குழுக் கூட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரது தலைமையில் நேற்று (07) நடைபெற்றது.

அலரி மாளிகையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், அடுத்த வார பாராளுமன்ற நடவடிக்கைகள், நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மின் நெருக்கடிக்குத் தீர்வு காணல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களைப் பயன்படுத்துதல், ஏற்றுமதிப் பொருளாதாரத்தை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இதன்போது விவாதிக்கப்பட்டன. எதிர்காலத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

நாட்டின் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதற்காக நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டம் தொடர்பில் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ விசேட விளக்கமளித்தார்.

# விசேட கலந்துரையாடல்

ரஸீன் ரஸ்மின்

புத்தளம் மாவட்டத்தில் எல்லைகள் நிர்ணயம் செய்வது மற்றும் கிராம சேவகர் பிரிவுகளை பிரிப்பது சம்பந்தமான விசேட கலந்துரையாடல், புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் தலைமையில் நேற்று முன்தினம் (06) நடைபெற்றது.

பாராளுமன்ற உறுப்பினரின் காரியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில், எல்லைகள் நிர்ணயம் மற்றும் கிராம சேவகர் பிரிவுகளைப் பிரிப்பது உள்ளிட்ட விடயங்களில் கலந்துகொண்ட உலமாக்கள் உள்ளிட்டோர் தமது ஆலோசனைகளையும் கருத்துகளையும் முன்வைத்தனர்.



இறுதியில் இந்த விடயங்கள் சம்பந்தமாக பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீமின் மேற்பார்வையில் குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன், அக்குழுவுக்கு திட்ட வரைவுகள் உள்ளிட்ட விடயங்களும் பணிகளாக ஒப்படைக்கப்பட்டுள்ளன.







# பிரம்மோற்சவம் ஆரம்பம்...

சிலாபம், முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாத சுவாமி கோவிலின் வருடாந்த பிரம்மோற்சவம் நேற்று (07) கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (படங்கள்: ரஸீன் ரஸ்மின்)

# “நல்லாட்சியல்ல சொல்லாட்சி”

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்

■ வ. சக்தி

எந்தவித பிரச்சினையும் இல்லாத சுமூகமான சூழ்நிலையில், நாட்டு மக்களின் தேவைகளை நிறைவேற்றாமல், வெறும் சொல்லாட்சியாகவே கடந்தகால நல்லாட்சி நடைபெற்றது என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட மகளிர் மாநாடு நேற்றுமுன்தினம் (06) மட்டக்களப்பு, பெரியபோரதீவில் நடைபெற்றபோது, அங்கு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது: “நல்லாட்சி அரசாங்கத்தில், வீதிக் கட்டுமானங்கள், பாலங்கள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. தற்போதைய பிரதமர் ஜனாதிபதியாக இருந்த காலத்தில்தான் மண்முனைப்பாலம், கல்லடிப்பாலம், வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம் திட்டங்கள் அனைத்தும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. எனவே, கடந்த நல்லாட்சியைப் பாதுகாத்ததில் தமிழ் தலைமைகளுக்கு பாரிய பங்கு உள்ளது. தமிழ் மக்களது



நீண்டகால மற்றும் குறுகிய காலப்பிரச்சினைகளுக்கும் கடந்த கால அரசாங்கத்தால் தீர்வு வழங்கப்படவில்லை. அபிவிருத்திகளும் மேற்கொள்ளப்படவில்லை.

“எமது அரசாங்கம், மட்டக்களப்பில் மாத்திரம் 2,147 பேருக்குத் தொழில் வழங்கியுள்ளது. இதில் 70 சதவீதமானவர்கள் பெண்கள். ஒரு இலட்சம் கிராமிய வீதிகள், அடிப்படையில் பல பில்லியன் மதிப்பீட்டிலான வீதிகள் புணரமைக்கப்படுகின்றன. கடந்தவருடம், 88 குளங்கள் வாரி புனரமைக்கப்பட்டன. இவ்வருடம் 100 குளங்களைப் புனரமைக்கத் திட்டமிட்டுள்ளோம். அரசியல் அதிகாரம் கடந்த காலங்களில் எமது கரங்களில் இருக்கவில்லை. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில், பட்டிருப்புத் தொகுதியிலுள்ள மக்கள் சரியாகச் சிந்தித்திருந்தால் ஆளும் கட்சியில் இன்னுமொருவரை நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்திருக்கலாம். இதுபற்றி நாம் எதிர்காலத்தில் சிந்திக்க வேண்டும்.

இயற்கைப் பசளையை இவ்வருடம் விவசாயிகள் பயன்படுத்தியதால் அறக்கொட்டி இம்முறை இல்லாமல் போயுள்ளது; புற்களின் தாக்கங்கள் குறைந்துள்ளது. அதாவது ஓர் ஏக்கருக்கு 10 மூடைதான் விளைந்துள்ளது. ஆனால், ஒரு மூடை நெல் 6,000 ரூபாய் வரை உயர்ந்துள்ளது என்றார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் மட்டக்கப்பு மாவட்ட மகளீர் அணித்தலைவி திருமதி ச.காந்தரூபி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் மட்டக்கப்பு மாவட்ட அமைப்பாளர் பரமசிவம் சந்திரகுமார், அக்கட்சியின் கொழுப்பு தலைமைக் காரியாலயத்திலிருந்து வருகை தந்திருந்த பாதிமா சிஹானா, சிதம்பரம் லோஹிஷ்வரி உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

# வவுனியாவுடன் அநுராதபுரத்தின் இரண்டு கிராமங்கள்

■ க. அகரன்

அநுராதபுரத்தின் இரண்டு கிராமங்களை வவுனியா மாவட்டத்துடன் இணைத்து, இன விகிதாசாரத்தை மாற்றியமைக்க முயற்சி மேற்கொள்ளப்படும் நிலையில், அதற்கான அனுமதி கோரிய பத்திரம் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டதாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

வவுனியா ஈரப்பெரியகுளத்தில் உள்ள மண்டபமொன்றில் சிதம்பரபுரம், கோமரசன்குளம், மதுராநகர் ஆகிய கிராம மக்களை சந்தித்து கலந்துரையாடிய போதே நிர்மலநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த நிர்மலநாதன், “2015 ஆம் ஆண்டிலிருந்து 2019 வரையும் வடக்கு, கிழக்கில் இடம்பெறவிருந்த சிங்கள குடியேற்றங்களை நாம் தடுத்து நிறுத்தியிருந்தோம். எனினும் 2019 நவம்பர் மாதத்துக்குப் பிற்பாடு, வவுனியா முல்லைத்தீவு மாவட்டங்களில், தென் பகுதியில் இருந்து சிங்கள மக்கள் கொண்டுவரப்பட்டு குடியேற்றப்பட்டு வருகின்றனர். வடக்கில் தமிழர்களின் விகிதாசாரத்தை மாற்றியமைப்பதற்காக இது மிகத் தீவிரமாக இடம்பெற்று வருகின்றது.

இந்தக் குடியேற்றத்தை இரண்டு வகையாக மேற்கொள்கின்றனர். அதாவது, இங்குள்ள அரச காணிகளில் தென்பகுதியில் இருந்து கொண்டு வந்து குடியேற்றுவது; மற்றையது, ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டு, அநுராதபுரம் மாவட்டத்துடன் உள்ள கிராமங்களை, வவுனியா மாவட்டத்துடன் இணைப்பதாக உள்ளது.

அண்மையில், போகஸ்வெள கிராமத்துக்கு ஜனாதிபதி வந்தபோது, திட்டமிட்டு கெப்பிட்டிகொல்லாவையில் உள்ள கிராமத்தில் இருந்து, அநுராதபுரத்துக்குச் செல்வது கடினம் எனவும் வவுனியா நகரத்துக்குச் செல்வது இலகு என்பதால், தமது கிராமங்களை வவுனியாவுடன் இணைத்து விடுமாறு பிரதேச சபை உறுப்பினர் ஒருவரால் கூறப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அண்மையில் வவுனியா மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில், அநுராதபுரம், கெப்பிட்டிகொல்லாவ பிரதேச செயலகத்தின் கனகவெள என்ற கிராமசேவகர் பிரிவையும், பதவிய பிரதேச செயலகப் பிரிவில் உள்ள கம்பெலிய என்ற கிராம சேவகர் பிரிவையும் முழுமையாக வவுனியா மாவட்டத்துடன் இணைப்பதற்கான அனுமதி பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதற்கு எதிராக நாம் பாராளுமன்றத்திலும் வெளியிலும் குரல்கொடுத்து வருகின்றோம்” எனத் தெரிவித்தார்.

### காரைநகரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள

# 135 இந்தியப் படகுகள் ஏலத்தில் விற்பனை

■ எஸ். நிதர்ஷன்

யாழ்ப்பாணம், காரைநகரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 135 இந்தியப் படகுகள் நேற்று (07) ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டன.

இதன்போது 48 அடி நீளமான மீன்பிடிப் படகொன்று, அதிக தொகையாக 13 இலட்சம் 50 ஆயிரம் ரூபாய்க்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது.

கொழும்பில் இருந்து வந்த கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள தலைமையக அதிகாரிகள் குழு, காரைநகரில் ஏலத்தில் விற்பனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டதுடன், இவ்வாறு விற்பனை செய்யப்பட்டுள்ள படகுகளை, கடந்த ஒரு வாரமாக அதிகமனோர் பார்வையிட்ட நிலையில், நேற்றும் பலரும் பார்வையிட்டனர். இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்து வருகை தந்தவர்கள் ஏலத்தில் ஆரம்ப வைப்பு தொகையாக 1,000 ரூபாய் பணத்தை செலுத்தி, ஏலத்தில் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

இலங்கையின் ஐந்து துறைமுகங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களுக்குச் சொந்தமான மீன்பிடிப் படகுகள், நேற்று முதல் 5 இடங்களில் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.





# வவுனியா கூமாங்குளத்தில் காஸ் அடுப்பு வெடிப்பு

## பொலிஸார் விசாரணை

■ க. அகரன்

வவுனியா, கூமாங்குளத்தில் வீடு ஒன்றில் சமைத்துக்கொண்டிருந்த சமயத்தில் காஸ் அடுப்பு வெடித்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் உள்ள வீட்டில் முதியவர் ஒருவர் றொட்டி சுட்டுக்கொண்டிருந்தபோது, திடீரென்று காஸ் அடுப்பு வெடித்துள்ளது. இதனையடுத்து வீட்டார் காஸ் சிலிண்டரை பாதுகாப்பாக அகற்றி மேலதிக அனர்த்தம் ஏற்படுவதைத் தடுத்துள்ளனர். அத்துடன் குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# ஆசிரியை பஹ்மிதா இடமாற்றம்

## சட்டவிரோதமானது என்கிறது குரல்கள் இயக்கம்

■ நூருல் ஹுதா உமர்

சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் இருந்து வெளியேற்றப்பட்ட ஆசிரியை பஹ்மிதா றமீஸ், திருகோணமலை வலயக் கல்வி அலுவலகத்தில் மறுஅறிவித்தல் வரை இணைக்கப்பட்டுள்ளார். குறிப்பிட்ட இணைப்புக்கான கடிதம், முதலில் வலயக் கல்விப்பணிப்பாளரிடம் இருந்தும் பின்னர் மாகாணக் கல்விப்பணிப்பாளரிடம் இருந்தும் ஆசிரியைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

தனது தற்காலிக இடமாற்றம், சட்டவிரோதமானது என்றும் தன்னை மீண்டும் இழுத்தடிப்புச் செய்வதற்கான நடவடிக்கை என்றும் கூறி, ஆசிரியை பஹ்மிதா றமீஸ், தனது கணவரின் ஊடாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு சமர்ப்பித்துள்ளார். குறிப்பிட்ட முறைப்பாட்டைச் சமர்ப்பிக்கும் வேளை, குரல்கள் இயக்கத்தின் தவிசாளர் றாஸிமுஹம்மத், அமைப்பின் சட்டப்பிரிவின் பொறுப்பாளர் முகைமின் காலித், சட்டத்தரணி சாதிர் ஆகியோர் ஆஜராகி இருந்தனர்.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்த சட்டத்தரணி முகைமின் காலித், “சண்முகா இந்து மகளிர் கல்லூரி, ஒரு தேசிய பாடசாலை. அது மத்திய அரசின் அதிகாரத்தின் கீழ் வருகின்றது. கல்வி அமைச்சு, ஆசிரியை பஹ்மிதாவை, சண்முகா வித்தியாலயத்துக்குக் கடமையேற்குமாறு கடிதம் அனுப்பி இருக்க, அதை நிறைவேற்றாமல் கல்வி அமைச்சை விட அதிகாரம் குறைந்த மாகாணப் பணிப்பாளர், எவ்வாறு கல்வி அமைச்சின் அதிகாரத்தை மேவ முடியும்? அத்தோடு ஒரு தேசிய பாடசாலை ஆசிரியரை இடமாற்ற வேண்டும் என்றால், கல்வி அமைச்சின் அனுமதியின்றி அதனை நிறைவேற்ற முடியாது. ஆனால், கிழக்கு மாகாண கல்விப் பணிமனை, கல்வி அமைச்சின் அனுமதியைப் பெறாமல் ஆசிரியை பஹ்மிதாவை இடமாற்றியது சட்டவிரோதமானது”என்றார்.

“குரல்கள் இயக்கம் குறிப்பிட்ட இடமாற்றத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்காக தயாராகின்றது” என அதன் தவிசாளர் றாஸி முஹம்மத் தெரிவித்தார்.



### சாய்ந்தமருது முகத்துவாரத்தில்

# கடற்கரை பூந்தோட்டம்

■ அஸ்ஹர் இப்றாஹிம்

சாய்ந்தமருது ஒகானிக் கிறின் அமைப்பால், சாய்ந்தமருது தோணா முகத்துவாரம் பிரதேசத்தில் அமையப்பட்டுள்ள Beach flower Garden வளாகம் நேற்றுமுன்தினம் (06) மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

மாலைப் பொழுதை இனிமையாகக் கழிக்கும் வகையிலும் சுத்தமான காற்றைச் சுவாசிக்கும் வகையிலும் ஒகானிக் கிறின் அமைப்பின் செயற்பாட்டாளர்களால் இவ்விடம் அழகுபடுத்தப்பட்டது.

இவ் அமைப்பின் தலைவர் எச்.எம்.ஸிஹாப் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கல்முனை மாநகர மேயர் ஏ.எம். றகீப் பிரதம அதிதியாக கலந்து கொண்டு Beach flower Garden பெயர்ப்பலகையை திரை நீக்கம் செய்ததுடன் , நாடாவை வெட்டி பொழுது போக்கு வளாகத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலக நிர்வாக உத்தியோகஸ்தர் ஏ.ஸி.எம்.பளீல், கிராம சேவகர்களுக்கான நிர்வாக உத்தியோகஸ்தர் எம்.எஸ்.எம். நளீர் , பொறியியலாளர் எம்.ஸி.கமால் நிஸாத், கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி சிரேஸ்ட ஆசிரியர்கள் உட்பட அமைப்பின் செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டனர்.

### மறுவயல் பயிர்ச்செய்கையின்கீழ்

# தங்கவேலாயுதபுரத்தில் உளுந்து அறுவடை

■ சகா

கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் தங்கவேலாயுதபுரம் விவசாய நிலையத்துக்கு உட்பட்ட கஞ்சிகுடிச்சாறு, தங்கவேலாயுதபுரம் கிராமங்களில் மறுவயல் பயிர்ச்செய்கையின்கீழ் உளுந்து பயிர்ச்செய்கை சிறப்பான முறையில் செய்கை பண்ணப்பட்டுள்ளது.

உளுந்து அறுவடை வயல் விழா, விவசாயப் போதனாசிரியர் எஸ். சித்திரன் தலைமையில் நடைபெற்றபோது, லகுகல வலயத்தின் உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ். பரமேஸ்வரன், பாட விதான உத்தியோகத்தர் என்.எம்.ஆர் றஹீல் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இங்கு கருத்து தெரிவித்த விவசாயப் போதனாசிரியர் எஸ்.சித்திரன், “கொரோனா காலத்தில் உணவு உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு, விவசாயிகளுக்கு மறுவயல் பயிர் விதைகள் வழங்கப்பட்டு, வெற்றிகரமாக பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது” எனத் தெரிவித்தார். மேலும், இங்கு கருத்து தெரிவித்த உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ். பரமேஸ்வரன், “கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் வழிகாட்டலின்கீழ், விவசாயிகளுக்கு மறுவயல் பயிர்ச்செய்கையின் மூலம் அதிக இலாபத்தைப் பெறக்கூடியதாக உள்ளது” எனத் தெரிவித்தார்.





# ஏழாலையில் ஐஸூடன் சகோதரர் கைது

■ டி. விஜித்தா, எம். றொசாந்த்

யாழ்ப்பாணம், சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏழாலை பகுதியில் ஐஸ் போதைப் பொருளுடன் 22, 29 வயதுடைய சகோதரரான சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், இராணுவப் புலனாய்வு பிரிவினரும், சுன்னாகம் பொலிஸாரும் இணைந்து இக்கைது நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது 3 கிராம் 58 மில்லி கிராம் ஐஸ் கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை. பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### பருத்தித்துறையில் கைதான

# 21 தமிழக மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

■ எம். றொசாந்த், என். ராஜ், எஸ். தில்லைநாதன்

பருத்தித்துறை கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 21 தமிழ்நாடு மீனவர்களினதும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 31ஆம் திகதி பருத்தித்துறை கடற்பரப்புக்குள் அத்துமீறி இரண்டு படகுகளில் நுழைந்த 21 தமிழக மீனவர்களை, வடமராட்சி மீனவர்கள் சுற்றி வளைத்து தடுத்து வைத்திருந்தனர். வடமராட்சி மீனவர்களிடமிருந்து தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் பொறுப்பெடுத்து, கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள், மறுநாள் 1ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை நேற்று வரையில் விளக்க மறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது.

அந்நிலையில் குறித்த வழக்கு நேற்று அழைக்கப்பட்ட போது, 21 மீனவர்களையும் எதிர்வரும் 21ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டுள்ளது.

அவர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்வதற்கு அனுமதி அளிக்குமாறு நீரியல் வள திணைக்கள அதிகாரிகளால் மன்றில் விண்ணப்பம் செய்யப்பட்டது. இதற்கு அவர்களிடம் வாக்குமூலம் பெறவதற்கு அனுமதி வழங்குமாறு சிறைச்சாலை அத்தியட்சகருக்கு மன்று உத்தரவிட்டது.

மேலும், அவர்களின் வள்ளங்களில் இருந்து மீட்கப்பட்டு பதப்படுத்திய நிலையில் உள்ள சுமார் 100 கிலோ கிராம் மீனை விற்பனை செய்வதற்கு அனுமதி அளித்த மன்று, விற்பனை செய்யும் பணத்தை நீதிமன்றத்தில் செலுத்துமாறு கட்டளை பிறப்பித்துள்ளது.



பசறை பிரதேச சபை உறுப்பினர்

## 3 நாள்களின் பின்னர் முறைப்பாடு

■ எம். செல்வராஜா

ஊவா மாகாண முன்னாள் முதலமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சாமர சம்பத் தஸநாயக்கவால் தாக்குதலுக்கு இலக்கானதாக தெரிவித்து, பசறை பிரதேச சபை உறுப்பினரான கண்மணி சிவனேசன், பசறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த மாதம் 3ஆம் திகதி, குறித்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாக தெரிவித்துள்ள சிவனேசன், பொலிஸ் நிலையத்தில் நேற்று முந்தினம் (06) முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில், சாமர சம்பத் தஸநாயக்கவிடம் வினவியபோது, தனக்கு



எதிராக செய்யப்பட்ட முறைப்பாடானது, அபாண்டமானதாகும். தன்மீது களங்கம் ஏற்படுத்தும் நோக்கிலேயே, காலம் கடந்த நிலையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. தான் எவரையும் எச்சமயத்திலும் தாக்கவில்லை என்று கூறினார்.

பிரதேச செயலக அதிகரிப்பு விடயத்துக்கு

# தனியுரிமை கோர முடியாது

### இராதா சொல்கிறார்; கையெழுத்தால் சாதித்தது எதுவுமில்லை என்கிறார்

■ டி.ஷங்கீதன்

நல்லாட்சி அரசாங்கத்தில், தமிழ் முற்போக்கு கூட்டணியின் மனோ கணேசன், திகாம்பரம், வேலுகுமார் மற்றும் என்னுடைய ஒத்துழைப்புடன் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட சட்டமே, பிரதேச செயலகங்களை அதிகரிக்க வேண்டும் என்ற விடயம் எனத் தெரிவித்த மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன், இதற்கு யாரும் தனியாக உரிமை கோரவோ அல்லது நான்தான்



செய்தேன் என்று சொல்லவோ முடியாது என்றார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், நாங்கள் ஒற்றுமையாகத் தமிழ் முற்போக்கு கூட்டணியாகச் செயற்பட்டதன் காரணமாகவே, இந்த வெற்றியை எங்களால் பெற்றுக் கொள்ள முடிந்தது. எனவே, ஒரு கூட்டு பொறுப்பாகச் செயற்பட்டதன் காரணமாகவே இது சாத்தியமானது. வெறுமனே நானோ, வேறு யாருமோ நினைத்திருந்தால் இதைச் சாதித்திருக்க முடியாது. இதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

நேற்று (07) நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில், நான் இது தொடர்பாக உரையாற்றிய பொழுது, மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி திஸாநாயக்க அதை ஏற்றுக் கொண்டதுடன், அதை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

நாங்கள் இந்த விடயம் தொடர்பாக, எல்லா இடங்களிலும் குரல் கொடுத்து வருகின்றோம். மலையகத்தில் கையெழுத்துத் திரட்டி, சாதித்த விடயம் எதுவும் இல்லை. எனவே, இதைப் பாராளுமன்றத்திலும் மாவட்ட அபிவிருத்தி குழுவிலும் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் குரல் கொடுப்பதன் மூலமே சாதிக்க முடியும்.

இனிவரும் பாராளுமன்ற அமர்விலும் அழுத்தம் கொடுப்போம். பிரதேச செயலகங்கள் அதிகரிப்பதன் மூலமாக, எங்களுடைய அபிவிருத்தி அதிகரிக்கும். கிராம சேவகர் பிரிவு அதிகரிக்கப்பட்டால் எங்களுக்கான நிதி அதிகரிக்கும் என்றார்.

'மக்கள் வாழ்வதற்கு வழி செய்'

## பசறையில் துண்டுப்பிரசுரம்

■ எம். செல்வராஜா

அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று (07) பசறை நகரில், 'மக்கள் வாழ்வதற்கு வசதி செய்' என்ற தலைப்பில் துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டது.

மேற்படி சங்கத்தின் தலைவரும் ஹல்துமுல்லை பிரதேச சபை உறுப்பினருமான கிட்ணன் செல்வராஜ் தலைமையில், இத்துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

இத்துண்டுப்பிரசுரத்தில் 'அத்தியாவசியப் பொருட்களின் விலையை குறை', 'எத்தகைய கழிவுகளுமின்றி ஆயிரம் ரூபாய் நாள் சம்பளத்தை தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கு', 'மக்களின் உழைப்பை சுரண்டாதே' போன்ற வாசகங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன.



ஹப்புத்தளையில்

## ஒன்றரை வயது குழந்தைக்கும் தொற்று

■ எம். செல்வராஜா

ஹப்புத்தளையில் ஒன்றரை வயதான ஆண்குழந்தைக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஹப்புத்தளையில் 28 பேருக்கு நேற்றுமுன்தினம் (06) அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்ட போது, இதில் 18 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் இதில் ஒன்றரை வயது குழந்தையும் உள்ளடங்குவதாக பதுளை மாவட்ட பொது சுகாதார பரிசோதகர் சங்கத்தின் உப தலைவர் சுப்ரமணியம் சுதர்சன் தெரிவித்துள்ளார்.

இக்குழந்தை சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், ஏனைய 18 பேரும் சுயதனிமைப்படுத்தப்பட்டு உள்ளனர் என மேலும் தெரிவித்துள்ளார்.



## பாதிப்பு...

ஏழு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, சுகாதார தொழிற்சங்கங்கள் நாடளாவிய ரீதியில் முன்னெடுத்துள்ள தொழிற்சங்க நடவடிக்கையால், மலையகத்தின் பல வைத்தியசாலைகளின் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டிருந்தன

(மலையக நிருபர்கள்)

ஹட்டன் டிப்போவுக்கு மூன்று நாள்களில்

## 6.4 மில்லியன் ரூபாய் வருமானம்

■ சுதத் எச்.எம்.ஹேவா

சுதந்திர தினத்துடனான தொடர்ச்சியான மூன்று நாள் விடுமுறையுடன் சிவனொளிபாதமலை யாத்திரைக்கு செல்வோருக்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்ட இ.போ.ச பஸ் போக்குவரத்து சேவை மூலம், ஹட்டன் டிப்போவுக்கு 6.4 மில்லியன் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த ஹட்டன் டிப்போவின் அதிகாரி டபிள்யு. ஜி. கீர்த்திரத்ன, நாட்டின் பல பாகங்களிலிருந்தும் யாத்திரிகர்கள் சிவனாளிபாதமலைக்குச் செல்வதற்காக, ஹட்டன் ரயில் நிலையத்துக்கு வருகை தருகின்றனர்.

இவ்வாறு வருகைத் தரும் யாத்திரிகர்களை சிவனொளிபாதமலைக்கு ஏற்றிச் செல்லவும் அங்கிருந்து மீண்டும் ரயில் நிலையத்துக்கு ஏற்றி வரவும் இரவு பகலாக, இ.போ.ச பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன. இதனால் அதிகளவு வருமானம் கிடைத்துள்ளது என்றார்.

எனவே இரவு, பகல் பாராது, தொடர்ச்சியாக கடமைகளில் ஈடுபட்ட இ.போ.ச பஸ் சாரதிகள், நடத்துநர்கள் உள்ளிட்ட அனைத்துப் பணியாளர்களின் அர்ப்பணிப்பு மூலமே இவ்வாறான வருமானத்தைப் பெற்றுகொள்ள முடிந்தது என்றார்.

நல்லதண்ணியில்

## கோவில் உடைக்கப்பட்டு நகைகள் கொள்ளை

■ காமினி பண்டார

நல்லதண்ணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மூள்ளுகாமம் தோட்டம் கீழ் பிரிவில் உள்ள, ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில், நேற்றுமுன்தினம் (06) இரவு உடைக்கப்பட்டு அம்மன் சிலைக்கு அணிவிக்கப்பட்டிருந்த நகைகள் கொள்ளையிடப்பட்டு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், உண்டியலில் இருந்த பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளதாக நல்லதண்ணி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

**“ அம்மன் சிலைக்கு அணிவிக்கப்பட்டிருந்த நகைகள் கொள்ளையிடப்பட்டு, உண்டியலும் உடைக்கப்பட்டுள்ளது**

இந்தக் கொள்ளை தொடர்பில், கோவில் நிர்வாகத்தினரால் நல்லதண்ணி பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

# தன்கோம் முத்தமிழுக்கு புதிய கட்டடம்

மொனராகலை மாவட்டம் தன்கோம் தோட்டத்திலுள்ள முத்தமிழ் பாடசாலையில் புனரமைக்கப்பட்ட கட்டடத்தை செந்தில் தொண்டமான் திறந்து வைத்தார்.

பழைய கட்டடம் கல்வி கற்பதற்கு ஏற்றதாக இல்லாததால் மாணவர்கள் சிரமத்துக்குள்ளாகியிருந்த நிலையில், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்களின் கோரிக்கைக்கு அமைய, செந்தில் தொண்டமானின் விசேட நிதி ஒதுக்கீட்டின்கீழ் இவ்வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



வார இறுதி நாள்களில் நுவரெலியாவுக்கு

## படையெடுக்கும் சுற்றுலாப் பயணிகள்

### பிரதேசவாசிகள் அச்சம்

■ டி.ஷங்கீதன்

நுவரெலியாவில் வார விடுமுறை நாள்களில் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்து வருவதால், அங்கு கொரோனா தொற்று அதிகரித்துவிடுமோ என்ற அச்சம் நுவரெலியா வாழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

ஏனைய நாள்களை விட, வார இறுதி நாள்களான சனிக்கிழமை, ஞாயிற்றுக் கிழமை ஆகிய நாள்களில், உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பெருமளவானோர் நுவரெலியாவுக்கு வருவதுடன், பெரும்பாலோனார் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுவதில்லை.

**“ உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பெருமளவானோர் நுவரெலியாவுக்கு வருவதுடன், பெரும்பாலோனார் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுவதில்லை. இவ்வாறு சுகாதார வழிகாட்டல்களை மீறுவோர் தொடர்பில் சம்பந்தப்பட்ட எந்தத் தரப்பும் அவதானிப்பதில்லை என்றும் பிரதேசவாசிகள் குற்றஞ்சுமத்துகின்றனர்**



எனினும், இவ்வாறு சுகாதார வழிகாட்டல்களை மீறுவோர் தொடர்பில் சம்பந்தப்பட்ட எந்தத் தரப்பும் அவதானிப்பதில்லை என்றும் பிரதேசவாசிகள் குற்றஞ்சுமத்துகின்றனர்.

அத்துடன், தற்போது நுவரெலியாவில் தொற்றாளர்கள் அதிகரித்து வரும் நிலையில், சுற்றுலா பயணிகள் அதிகமாக வருகை தருவதாகவும் இலங்கையில் ஏனைய பிரதேசங்களில் தொற்றாளர்கள் அதிகரிப்பது போலவே நுவரெலியாவிலும் தொற்றாளர்கள் அதிகரிக்கின்றனர் என, நுவரெலியா மாநகர பொது சுகாதார அதிகாரி டீ. எம். எஸ். பீ. தெல்பிடிய தெரிவித்துள்ளார்.

கிரிமெட்டிய த. வித்தியாலய மாணவர்களின்

## குடிநீர் பிரச்சினைக்குத் தீர்வு

■ மொஹொமட் ஆஸிக்

கண்டி, கிரிமெடிய தமிழ் வித்தியாலயத்தின் நீண்ட நாள் தேவையாகக் காணப்பட்ட மாணவர்களின் குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு கிடைத்துள்ளது.

பாடசாலை நலன் விரும்பிகளில் ஒருவரான வி.கே. கேதீஸ்வரன் பிள்ளை என்பவர் முன்வந்து குடிநீருக்கான வசதியை ஏற்படுத்தியுள்ளார்.

அதற்கமைய, கிணறு அமைக்கப்பட்டு, இயந்திரம் பொருத்தப்பட்டு குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதுடன், இந்நிகழ்வு, பாற்பொங்கி ஆரம்பிக்கப்பட்டது.



# அண்ணாந்து பார்த்துக்கொண்டு எச்சிலைத் துப்பக்கூடாது

அதிரடியாக தீர்க்கவேண்டிய பிரச்சினைகளை இனங்கண்டு, அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்காவிடின் பிரச்சினைகள் குவிந்து, 'பிச்சைக்காரனின் புண்போல' ஆகிவிடும். பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்காது, விட்டோடுதல் அல்லது கணக்கிலெடுக்காது விடுத்தல், நல்லதொரு நிர்வாகத்துக்கு அழகல்ல.

படுபாதாளத்தில் விழுந்து கிடக்கின்ற பொருளாதாரத்தைத் தூக்கிநிமிர்த்தி, கட்டியெழுப்ப வேண்டுமாயின், ஒவ்வொருவரும் அர்ப்பணிக்க வேண்டும். 74ஆவது சுதந்திரதின உரையில், அர்ப்பணிப்பை வலியுறுத்திய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, வெளிநாடுகளில் இருக்கும் இலங்கையர்களை முதலீடு செய்யுமாறு அழைத்திருந்தார்.

இந்நிலையில், மற்றுமோர் அறிவிப்பை விடுத்திருக்கும் நிதியமைச்சு, எம்.பிக்கள், அமைச்சர்கள் போன்றோர், அரச நிறுவன செலவுகளை மேலும் கட்டுப்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளது. இது நல்லதோர் ஆரம்பத்தின் இரண்டாவது படியாக இருந்தாலும், சகலரும் கட்டுப்படுத்த வேண்டும்.

இந்த அரசாங்கத்தின் அமைச்சரவை, பாராளுமன்றம் உள்ளிட்ட ஏனைய நிறுவனங்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் அவர்களின் உறவினர்களுமே இருக்கின்றனர். அவ்வாறிருக்கையில், செலவுகளைக் கட்டுப்படுத்துவது, செயற்பாடுகளில் எதிர்பார்ப்பது சாத்தியமாகாது.

அவ்வாறு சாத்தியப்படுத்தும் உண்மையான எண்ணம் இருக்குமாயின், 74 ஆவது சுதந்திர தினத்தன்று, முன்னெடுக்கப்பட்ட விமான சாகசங்களை நிறுத்தியிருக்கலாம். வானத்தை விஞ்சி விலைகள் உயர்ந்துகொண்டிருக்கும் நிலையில், மக்களை வானத்தை நோக்கி பார்க்கவிட்டு, அண்ணாந்துகொண்டே எச்சிலைத் துப்பிக்கொண்டது இந்த அரசாங்கம்.

கட்டளைகள், அறிவிப்புகளை விடுக்கும்போது, மிகக்கவனமாக விடுத்து, முன்மாதிரியாக நடந்துகொள்ளவேண்டும். அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், பரிவாரங்களுடன் பறந்து திரிகையில், வாயையும் வயிற்றையும் கட்டிக்கொள்ளுமாறு சாதாரண மக்களை கோருவது, எந்தவிதத்திலும் நியாயமாகாது.

வானத்தில் சாகசமடித்த விமானங்கள் பயன்படுத்திய எரிபொருளுக்கும், சாதாரண மக்கள் பயன்படுத்தும் எரிபொருளுக்கும் பாரிய வித்தியாசங்கள் இருக்கின்றனவென விதண்டாவாதமாகப் பதிலளிக்கலாம். என்ன வித்தியாசம் இருந்தாலும், கொள்வனவு செய்வதற்கு டொலர் தேவைப்படுகின்றது.

கடனை மட்டுமே வாங்குவதன் ஊடாக, டொலர் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. உள்நாட்டில் ஏற்றுமதி உற்பத்திகளை அதிகரிக்கவேண்டும். தலைவன் முதல் தொண்டன் வரையிலும் செலவுகளைக் கட்டுப்படுத்தவேண்டும். சாதாரண பொதுமக்களிடத்தில் செலவுகளைக் கட்டுப்படுத்துமாறு அறிவுறுத்த முடியாது. ஏனெனில், ஏற்கெனவே, அரை வயிறும் கால்வயிறுமாகவே அந்தத்தரப்பினர் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

வர்த்தமானி அறிவித்தல்கள், சுற்றறிக்கைகளின் ஊடாக, செலவுகளைக் கட்டுப்படுத்த முடியாது. ஏற்கெனவே முன்னெடுக்கப்படும் நிர்மாணப்பணிகளைத் தவிர, புதிய திட்டங்கள் எவற்றுக்கும் அனுமதியளிக்கக்கூடாது; பரிவாரங்களுடன் சென்று படங்காட்டக்கூடாது; இவையெல்லாம் முன்மாதிரியாக அமையும்.

மற்றுமொரு தடவை எரிபொருளின் விலை அதிகரித்துள்ளமையால், அடுத்து எவற்றுக்கு விலை கூடுமோவென மக்கள் அச்சத்தில் வாழ்கின்றனர். ஆக, விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்துவது குறித்தும் அரசாங்கம் கரிசனையைக் காட்டவேண்டும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

அன்பான கணவனும் மனைவியும் இணைந்து அறவாழ்வுடன் வாழ்ந்து, புதிய உயிரை அழகிய தேகத்துடன் பெற்றெடுக்கின்றார்கள். தங்களின் செல்லக் குழந்தையைக் கண்ணெனக் கருதி, வளர்த்து ஆளாக்குகின்றார்கள்.

இப்படியே உருவாக்கி, வளர்த்த பெற்றோர்கள் யாவரும், பிள்ளைகள் எப்படி கௌரவத்துடனும் நற்பண்புடனும், கல்வியறிவுடனும் வாழ வேண்டும் என அனுதினமும் கடவுளை வேண்டிக் கொள்கின்றார்கள்.

பெற்றோரின் எண்ணப்படி, அநேக பிள்ளைகள் நன்கு படித்து, நல்ல நிலைக்கு வந்துவிடுகின்றார்கள். ஆனால், ஒரு சிலர் மட்டும் பெற்றோர் மனதைப் புண்படுத்தி விடுகின்றனர். சகவாச தோசத்தால், இஷ்டப்படி வாழ்ந்து, தாங்களே வாழ்க்கையைக் கேள்விக்குறியாக்கி விடுகின்றார்கள்.

இவர்கள், பெற்றோருக்கு மட்டுமல்ல, சமூகத்துக்கும் ஊறுவிளைவிக்கும் பிரஜைகளாக மாறிவிடுகின்றார்கள். மனம் போனபடி வாழ்வதே இலட்சியம் என அகந்தையுடன், அழிவை நோக்கிச் சீரழிவது கொடுமை. கஷ்டப்பட்டு வளர்த்த பெற்றோர், உறவுகளைப் பற்றி உணர்வதே இல்லை.

உலகம் எனும் அழகிய படைப்பில் இஷ்டத்துடன், கண்டபடி வாழமுடியாது. நாளைய உலகுக்கு இன்றே நல்லது செய்க!

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

திருமலை விவகாரம்:

# இன, மத சகிப்புத் தன்மையின் அவசியம்

மொஹமட் பாதுஷா

பல்லின, பல்மதம், பல்கலாசாரங்களைக் கொண்ட நாடுகளில் வாழ்கின்ற ஒவ்வொரு மக்கள் கூட்டத்துக்கும் இடையில் அவர்கள் தனித்துவங்கள், கலாசாரம் பற்றிய பரஸ்பர புரிதல் அவசியமாகின்றது. இதற்கு இன, மத சகிப்புத்தன்மை மிகவும் அடிப்படையான விடயமாகும்.

இலங்கையில் இன, மத சகிப்புத்தன்மையில் ஏற்பட்ட பின்னடைவே பல்வேறு இன முரண்பாடுகளுக்கும் தேவையற்ற நெருக்கடிகளுக்கும் வித்திட்டுள்ளது. இருப்பினும், சகோதர இனத்தின் பிரத்தியேகமான பழக்க வழக்கங்களை நேரிய மனதுடன் சகித்துக் கொள்ளவதில், இன்னும் முன்னேற்றம் வேண்டும் என்பதையே அண்மையில் திருகோணமலையில் உள்ள பாடசாலையொன்றில் இடம்பெற்ற கசப்பான நிகழ்வு உணர்த்தி நிற்கின்றது.

குறிப்பிட்ட பாடசாலையில் முஸ்லிம் கலாசார ஆடையுடன் கடமைக்கு வந்த ஓரிரு ஆசிரியைகளுக்கு எதிராக, 2017ஆம் ஆண்டு பாடசாலைச் சமூகம் போர்க்கொடி தூக்கியது. இது பெரும் விவகாரமாக ஆகியிருந்த நிலையில், அதில் ஓர் ஆசிரியை, முஸ்லிம் சிவில் சமூக அமைப்பொன்றின் ஒத்துழைப்புடன் மனித உரிமைகள் ஆணைக்குழுவை நாடியிருந்தார்.

மனித உரிமை ஆணைக்குழு, மேற்படி ஆசிரியரின் உரிமையை மதித்து, குறிப்பிட்ட ஆடையுடன் பாடசாலைக்கு வருவதற்கு இடமளிக்குமாறு சிபாரிசை வழங்கியிருந்தது. இருப்பினும் பிரச்சினை தீரவில்லை. அதன்பிறகு இவ்விவகாரம் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இந்நிலையில், நீதிமன்றத்தில் வழக்கின் வாதிக்கும் பிரதிவாதிகள் தரப்புக்கும் இடையில், இந்த ஆடை தொடர்பாக ஏற்பட்ட இணக்கப்பாட்டையடுத்து, குறிப்பிட்ட ஆசிரியையை 'அபாயா' அணிந்து பாடசாலைக்குச் செல்வதற்கு நீதிமன்றம் அனுமதியளித்திருந்து என்று இதற்கான முன்னின்ற 'குரல்கள்' இயக்கம் தெரிவித்துள்ளது.

இந்தப் பின்னணியில், பாடசாலைக்கு சென்ற ஆசிரியைக்கு எதிராக அங்குள்ள நிர்வாகத்தினர் எதிர்ப்புத் தெரிவித்தனர். இந்நிலையில் தன்னை (கழுத்தைப் பிடித்து) தாக்க முற்பட்டதாக ஆசிரியை கூறி, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். தன்னை, ஆசிரியர் தாக்கியதாக அதிபரும் அதே வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சென்றார்.

முதலாவது விடயம் இன, மத சகிப்புத்தன்மையும் ஒவ்வொருவரினதும் தனித்துவங்களை அங்கிகரிக்கின்ற மனப்பாங்கும் பக்குவமும் எல்லா மக்களிடத்திலும் ஏற்பட வேண்டும். இலங்கை போன்ற சிறிய பல்லின நாட்டில், அது மிகவும் இன்றியமையாததாகும்.

ஒருவரது இன தனித்துவத்தை, மத ரீதியான பழக்க வழக்கங்களுடன் நமக்கு உடன்பாடு இல்லை என்றாலும், அது அவர்களின் கலாசாரம் என எண்ணிக் கொண்டு பொறுமையுடன் இருப்பதையே இது குறித்து நிற்கின்றது. ஆனால், இதுபற்றிய பிழையான கற்பிதங்கள் நம்மிடையே உள்ளன.

இந்துக் கோவிலில் காலை வேளையில் நாதஸ்வர ஒலியும் பக்தி கீதங்களும் ஒலிக்க விடப்படுவதும் விகாரைகளில் 'பன' ஓதப்படுவதும், பள்ளிவாசல்களில் அதான் (பாங்கு) ஒலிப்பதும் வழக்கமாகும். இதனை ஏனைய சமூகங்களின் மக்கள் சற்று பொறுமையுடன் சகித்துக் கொள்கின்றார்; சகித்துக் கொள்ளவே வேண்டும். அதற்கெதிராகப் போர்க்கொடி தூக்க முடியாது. அதுதான் பக்குவப்பட்ட மக்களுக்கு அழகாகும்.

ஒரு தமிழ் ஆசிரியை முஸ்லிம் பாடசாலைக்கு புடவை உடுத்தி, பொட்டு வைத்துக் கொண்டு வருகின்றார் என்பதற்காக அங்குள்ள முஸ்லிம்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்க முடியாது. அது அவரது மத, இன, கலாசாரம் என்பதற்குமப்பால் ஆடை அணிவது இலங்கையின் அரசியலமைப்பில் அவருக்கு இருக்கின்ற உரிமையும் ஆகும். இது ஏனைய இனங்களுக்கும் பொருந்தும்.

இவ்வாறு, மாற்று இன, மத குழுமத்தின் தனித்துவத்தை, உரிமைகளை மதிக்க வேண்டிய கடப்பாடும், இந்தச் சகிப்புத்தன்மையை அடுத்த தலைமுறைக்கு கடத்த வேண்டிய பொறுப்பும் ஒவ்வோர் இனத்துக்கும் இருக்கின்றது.

ஆனால், திருமலைச் சம்பவம் இதற்கு மாற்றமாக இடம்பெற்றிருக்கின்றது. நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்குத் தீர்ப்பைத் தொடர்ந்து, முகத்தை மூடாத ஆடை அணிந்து வந்த குறிப்பிட்ட முஸ்லிம் ஆசிரியைக்கு அங்கிருந்தவர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். பரஸ்பர வாக்குவாதத்தையடுத்து பிரச்சினை முற்றியுள்ளது.

இந்த விவகாரத்தை பாடசாலைச் சமூகம் மிகவும் பக்குவமாகக் கையாண்டிருக்கலாம் என்பதே, இப்போது பொதுவாக முன்வைக்கப்படுகின்ற அபிப்பிராயமாகும்.

நீதிமன்ற உத்தரவை மதித்திருக்க வேண்டும் என்பது முதலாவது விடயமாகும். ஆனால், அதையும் தாண்டி, இந்த ஆசிரியையுடன் அல்லது அவரது அபாயாவுடன் உடன்பட முடியவில்லை என்றால், இவ்விடயத்தை இதைவிடக் கவனமாக வேறு வழியில் சட்டத்துக்குட்பட்டு கையாண்டிருக்க வேண்டும்.

ஆனால், மனித உரிமைகள் ஆணைக்குழு, நீதிமன்றத்தின் சிபாரிசுகளை மதிக்கத் தவறியது மட்டுமன்றி, இதில் மாணவர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளமை மிக மோசமான முன்னுதாரணமாகவே கருதப்படுகின்றது.

எவ்வாறிருப்பினும், இது முஸ்லிம் சமூகத்திற்கும் தமிழ் சமூகத்திற்கும் இடையிலான ஒரு பிரச்சினையல்ல. முஸ்லிம்களுக்கும் தமிழ் சமூகத்தில் உள்ள ஒரு குழுவினருக்கும் இடையிலான விவகாரம். இதனை வைத்து தமிழ் - முஸ்லிம் உறவில், முரண்பாடுகளை வளர்த்துக் கொள்ளக் கூடாது.

இலங்கை வரலாற்றில் பாடசாலைகள் இன, மத ரீதியாக பிரிக்கப்பட்டிருப்பது தவறு என்றாலும், அவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளதன் காரணமாக கல்விக் கட்டமைப்புக்குள் இன, மத பேதங்கள் இதுகாலவரை பெரிதாகத் தோற்றம்பெறவில்லை.

முன்னைய காலங்களில் முஸ்லிம்களில் கணிசமானோர் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கொழும்பில் உள்ள பாடசாலைகளிலும் உயர் கல்வியகங்களிலும் தமிழ் ஆசிரியர்களிடமே கற்றனர். பல நூற்றுக்கணக்கான தமிழ் ஆசிரியைகள் மட்டுமன்றி, ஏனைய அரச, தனியார் உத்தியோகத்தர்கள் கூட, முஸ்லிம் பாடசாலைகள் மற்றும் முஸ்லிம்களுக்குச் சொந்தான அல்லது முஸ்லிம் பிரதேசங்களில் தங்களுக்கு விருப்பமான அடையுடன் பணிக்கு வருகின்றனர். இதனை யாரும் எதிர்க்கவில்லை.

அதுபோல, தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள சிறிய, பெரிய பாடசாலைகளில், ஆயிரக்கணக்கான முஸ்லிம் ஆசிரியைகள் தமது கலாசார ஆடையுடன் இன்றும் பணிக்குச் செல்கின்றனர். முகத்தை மூடாத ஆடையான 'அபாயா' உடுத்தி அரச அலுவலகங்களில் பணியாற்றுகின்றனர்.

இதற்கெதிராக யாரும் போர்க்கொடி தூக்கவில்லை. ஏனெனில், அவர்களது அடிமனதில் 'மற்றவர்களின் கலாசாரத்தை, பழக்க வழக்கங்களை மதிக்க வேண்டும்' எண்ணமும் புரிதலும் உள்ளது. தமக்கு உடன்பாடில்லாத விடயங்களைக் கூட சகித்துக் கொள்ளும் மனப்பாங்கு உள்ளது.

சுமார் 25 வருடங்களுக்கு முன்னர், தமிழ் ஆசிரியை ஒருவருக்கு பொட்டு வைப்பதில் ஏற்பட்ட பிரச்சினைக்கு, மறைந்த தலைவர் எம்.எச். எம்.அஷ்ரப் குரல் கொடுத்ததை இங்கு நினைவுபடுத்த வேண்டியுள்ளது. அதேபோல், முஸ்லிம்களுக்கு எதிரான இனவாத நெருக்கடிக்காக தமிழ், சிங்கள முற்போக்கு அரசியல்வாதிகளும் குரல் எழுப்பியதை குறிப்பிட்டாக வேண்டும்.

இனக் குழுமங்களுக்கு இடையிலான உறவு என்பது, மிகவும் நீண்ட வரலாற்றைக் கொண்டதும் தொன்மையானதும் ஆழமானதும் ஆகும். எந்த இனமாயினும் அற்பத்தனமான விடயங்களுக்காக அடுத்த சமூகத்துடன் முரண்பட்டுக் கொள்வது ஒருபோதும் நல்ல பெறுபேறுகளைத் தரப் போவதில்லை.

அதேநேரம், இன உறவு பற்றியும் நல்லிணக்கம் பற்றியும் பேசிவருகின்ற சூழலில், பாடசாலைகள் ஊடாகவும் ஏனைய வழிகளிலும் இளைய தலைமுறையினரிடையே இன ஐக்கியத்திற்கான விதைகளைத் தூவ வேண்டிய தேவை இலங்கை சூழலில் அதிகமாக உள்ளது.

அந்த வரிசையில், அடுத்த தலைமுறையினருக்கு நல்ல விடயங்களை எடுத்துக் கூறும் கல்விக் கூடமொன்றில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தை, இந்த வரிசையில் ஒரு நல்ல முன்மாதிரியாக எடுத்துக் கொள்ளவே முடியாது.

முஸ்லிம்களும் தமிழர்களும் இணைந்து செயற்பட வேண்டும் என்ற குரல்கள் உரக்க ஒலிக்கின்ற ஒரு காலகட்டத்தில், எங்கோ ஒரு புள்ளியில் ஏற்படுகின்ற மனமுறிவு, நம்பிக்கையீனம் தமிழ்-முஸ்லிம் உறவில் ஒரு நஞ்சாக அகத்துறுஞ்சப்படும் என்பதை மறந்து விடக் கூடாது.

உண்மையில், சக மனிதனுக்காக, சக இனத்தின் உரிமைக்காகவும் குரல்கொடுக்கும் மனநிலையை வளர்த்துக் கொள்ள வேண்டியுள்ளது. நல்ல முன்மாதிரிகளை வெளிப்படுத்த வேண்டியுள்ளது. சட்டத்தை மதிக்கின்ற, மனித உரிமைகளுக்கு கௌரவம் அளிக்கின்ற, சக இனத்தின் உணர்வுகளை, கலாசாரத்தை, நடை உடை பாவனைகளை சகித்துக் கொள்கின்ற பண்புகளையே அடுத்த தலைமுறைக்கு விட்டுச் செல்ல வேண்டியிருக்கின்றது.

## கடிதங்கள்

### குழாய்க் கிணறை விரைவில் புனரமைக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு-பரந்தன் வீதியில், புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு அருகாமையில் உள்ள குழாய் கிணறை, விரைவில் புனரமைத்துத் தருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

பல ஆண்டு காலமாக, பொது மக்களுடைய குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்து வருகின்ற குறித்த குழாய்க்கிணறு, பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றபோதும், பிரதேச சபை அதற்கான உரிய நடவடிக்கைகளை செய்யவில்லை எனப் பொதுமக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு எழுத்து மூலமும் சபையின் தவிசாளர் உறுப்பினர்களிடம் நேரிலும் பல தடவைகள் தெரிவித்தும், இதுவரை அதற்கான எந்த விதமான நடவடிக்கைகளும் உரிய வகையில் எடுக்கவில்லை எனவும் சுமார் 200க்கும் மேற்பட்ட மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் இந்தக் கிணறை, உரிய வகையில் புனரமைத்துத் தருமாறும் இதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மிக விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரி நிற்கின்றனர்.

– சண்முகம் தவசீலன்







# சமந்தாவுடன் சாப்பாடு

நடிகை சமந்தா அண்மையில் மும்பை சென்று தனது கூந்தல் அழகை மெருகேற்றியுள்ளார். அதன்பிறகு அவரது லுக் வேற லெவலில் இருப்பதாக ரசிகர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், நடிகை சமந்தா, நடிகை வரலட்சுமி மற்றும் தனது ஆடை வடிவமைப்பாளர் நீரஜா ஆகியோர்களுடன் மதிய உணவு சாப்பிட்ட புகைப்படத்தை சமூக வலைதளத்தில் பதிவு செய்துள்ளார்.

இதனையடுத்து, இந்தப் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன.

இதேவேளை, சமந்தா மற்றும் வரலட்சுமி சரத்குமார் ஆகிய இருவரும் இணைந்து 'யசோதா' என்ற திரைப்படத்தில் நடித்து வருகின்றனர். தமிழ், தெலுங்கு, ஹிந்தி, கன்னடம் மற்றும் மலையாளம் ஆகிய 5 மொழிகளில் உருவாகி வருகிறமை குறிப்பிடத்தக்கது.

# அதிதியின் அதிரடி



பிரமாண்ட இயக்குனர் ஷங்கரின் மகள் அதிதிஷங்கர் அண்மையில் நடிகையாக அறிமுகமானார். கார்த்தி நடிப்பில் முத்தையா இயக்கத்தில் உருவாகியுள்ள 'விருமன்' என்ற திரைப்படத்தில் அவர் நாயகியாக நடித்துள்ளார்.

மேலும் சிம்புவின் அடுத்த திரைப்படமான 'கொரோனா குமார்' என்றத் திரைப்படத்திலும் அதிதி ஷங்கர் தான் நாயகி என்று கூறப்படுகிறது

இந்த நிலையில் நடிகையை அடுத்து இன்னொரு துறையிலும் கால் வைத்துள்ளதாக அதிதி ஷங்கர் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். அதில் இசையமைப்பாளர் தமன் இசையில் ஒரு பாடலை பாடி இருப்பதாக அதிதி ஷங்கர் பதிவிட்டுள்ளார்.

வருண்தேஜ் நடிப்பில் தெலுங்கில் உருவாகி வரும் 'கானி' என்ற திரைப்படத்தில் இடம்பெறும் 'ரோமியோ ஜூலியட்' என்ற பாடலை பாடியிருப்பதாகவும், என்னை நம்பி இந்த பாடலை பாட எனக்கு வாய்ப்பு கொடுத்த இசையமைப்பாளர் தமனுக்கு தனது நன்றி என்றும் அதிதி ஷங்கர் குறிப்பிட்டுள்ளார்.

ஷங்கர் இயக்கிய 'பாய்ஸ்' திரைப்படத்தில் நடிக்க வாய்ப்பு பெற்ற தமன், தற்போது ஷங்கர் மகளுக்கு தான் இசையமைக்கும் திரைப்படத்தில் பாட வாய்ப்பளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஷங்கரின் மகள்களுக்கு மறுப்பு



பிரபல தெலுங்கு சூப்பர் ஸ்டார் நடிகர் மகேஷ் பாபு நடிப்பில் உருவான 'சர்க்காரு வாரி பாட்டா' என்ற திரைப்படம் வரும் மே மாதம் 12ஆம் திகதி வெளியாக உள்ளது.

இந்த நிலையில் அண்மையில் பேட்டியளித்த மகேஷ்பாபு, ஒரு முறை தான் தனது குடும்பத்துடன் நட்சத்திர ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது இரண்டு பெண்கள் தன்னிடம் வந்து ஆட்டோகிராப் கேட்டதாகவும், தற்போது குடும்பத்துடன் தனிப்பட்ட நேரம் செலவளிக்க வந்துள்ளதால் ஆட்டோகிராப் போட மறுத்து விட்டதாகவும் கூறினார்.

அப்போது தன்னுடைய நண்பர் ஒருவர் ஆட்டோகிராப் கேட்ட இரண்டு பெண்கள் பிரமாண்ட இயக்குநர் ஷங்கரின் மகள்கள் என்று கூறியதும் அதிர்ச்சி அடைந்ததாகவும், அதன் பிறகு ஷங்கரை நேரில் பார்த்து ஆட்டோகிராப் போட்ட மறுத்ததற்கு மன்னிப்பு கேட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் ஷங்கரின் மகள்கள் இருவரும் ஒரு பிரமாண்ட இயக்குநரின் மகள்கள் என்ற பந்தா இல்லாமல் மிகவும் சாதாரணமாக இருந்தார்கள் என்றும் அது தனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளதாகவும் அந்த பேட்டியில் மகேஷ் பாபு கூறியுள்ளார்.

# ரஜினி வீட்டில் சண்டை

நடிகர் தனுஷும் சூப்பர் ஸ்டார ரஜினிகாந்தின் மூத்த மகளான ஐஸ்வர்யாவும் கடந்த 2004 ஆம் ஆண்டு திருமணம் செய்தனர். இந்நிலையில் திருமணம் ஆகி 18 ஆண்டுகள் கழித்து இருவரும் பிரிவதாக கடந்த மாதம் அறிவித்தனர்.

இருவரையும் சேர்த்து வைக்க இரண்டு குடும்பத்தினருமே தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். ஐஸ்வர்யா மனம் மாறினாலும் தனுஷ் மனம் மாறுவதாக தெரியவில்லை.





# ஓடிடி தப்பே இல்லை: தயாரிப்பாளர் வேதனை

கடந்த நவம்பர் 25ஆம் திகதி வெளியான சிம்புவின் 'மாநாடு' திரைப்படம் முதல்நாளே 10 கோடி ரூபாய் வசூல் செய்ததாகவும் 25வது நாளில் 100 கோடி ரூபாய் வசூல் செய்ததாகவும் கூறப்பட்டது.

இந்த நிலையில் 'மாநாடு' திரைப்படத்தின் தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சி தனது டுவிட்டர் பக்கத்தில் வேதனையுடன் ஒரு பதிவு செய்துள்ளார்.

அதில் 'மாநாடு' திரைப்படம் வெளியாகி 75 நாட்கள் ஆகியும் இன்னும் விநியோகஸ்தர்கள் கணக்கு ஒப்படைக்கவில்லை என்றும், ஒரு வெற்றித் திரைப்படத்துக்கே இந்த நிலைமை என்றால் மற்றத் திரைப்படங்களின் நிலையை என்ன சொல்ல? என்றும், இப்படி இருந்தால் எப்படி தொழில் செய்வது? என்றும் கேட்டுள்ளார்.

மேலும் நடிகர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் ஓடிடி பக்கம் செல்வதில் என்ன தப்பு இருக்குனு யோசிக்க வைக்கிறாங்க? என்றும் தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சி வேதனையுடன் தெரிவித்துள்ளார்.

மும்பை

# போக்குவரத்து நெரிசலால் 3 சதவீதம் விவாகரத்து



மராட்டிய முன்னாள் முதல்-மந்திரி தேவேந்திர பட்னாவிசின் மனைவி அம்ருதா மும்பையில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டார். இதில், நிகழ்ச்சி முடிந்த பிறகு அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: -

இதை ஒரு சாதாரண குடிமகனாக நான் சொல்கிறேன். வீட்டை விட்டு வெளியே வந்தால், குண்டும் குழியுமான சாலைகள், போக்குவரத்து நெரிசல் போன்ற பல பிரச்சினைகளை பார்க்கிறேன். நான் தேவேந்திர பட்னாவிசின் மனைவி என்பதை மறந்துவிட்டு, ஒரு பெண்ணாக உங்களிடம் பேசுகிறேன்.

மும்பையில் ஏற்படும் போக்குவரத்து பிரச்சினையால் பலரால் குடும்பங்களுடன் நேரத்தை செலவிடமுடியவில்லை. இதனால் 3 சதவீத விவாகரத்து ஏற்படுகிறது என்பது உங்களுக்கு தெரியுமா?. எனவே இதுபோன்ற பிரச்சினைகளில் அதிக கவனம் செலுத்துமாறு மாநில அரசை அறிவுறுத்துகிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

மேயர் விமர்சனம்

இந்தநிலையில் அம்ருதா பட்னாவிசின் பேச்சு குறித்து மும்பை மேயர் கிஷோரி பெட்னேக்கர் கூறுகையில், "அம்ருதா முன்னாள் முதல்-மந்திரியின் மனைவி. போக்குவரத்து நெரிசலால் விவாகரத்து ஏற்படுகிறது என அவர் கூறி இருப்பது விசித்திரமாக உள்ளது. விவாகரத்துக்கு பல காரணங்கள் கூறப்படும். முதல் முறையாக இதுபோன்ற ஒரு விசித்திரமான காரணத்தை கேள்விப்படுகிறேன்" என்றார்.

லதா மங்கேஷ்கர் மறைவுக்கு

# 7 மாநிலங்களில் அரசு விடுமுறை



'இந்தியாவின் இசைக்குயில்' என அழைக்கப்படும் புகழ்பெற்ற பின்னணிப் பாடகி லதா மங்கேஷ்கர், மறைவுக்கு 7 மாநிலங்களில் அரசு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

உடல் நலக்குறைவு காரணமாக முதுபெரும் பாடகி லதா மங்கேஷ்கர் நேற்று முன்தினம் (06) தனது 92ஆவது வயதில் காலமானார்.

இதனையடுத்து அவரது உடல் முழு அரசு மரியாதையுடன் நேற்ற முன்தினம் மும்பையில் தகனம் செய்யப்பட்டது.

இந்நிலையில் லதா மங்கேஷ்கரின் மறைவையொட்டி மகாராஷ்டிரா, மேற்கு வங்கம், மத்திய பிரதேசம்

கர்நாடகா, கோவா, சிக்கிம், சட்டீஸ்கர் ஆகிய 7 மாநிலங்களில் நேற்று முன்தினமும், நேற்றைய தினமும் அரசு விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



புதுக்கோட்டை

# கண்களை கட்டியபடி தேர்தல் பிரச்சாரம்

தமிழகத்தில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் பிரச்சாரம் நாளுக்கு நாள் சூடுபிடித்து வருகிறது.

இன்னும் 13 தினங்களே தேர்தலுக்கு எஞ்சியுள்ளதால் தேர்தல் களத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் பல்வேறு வகையான நூதன பிரச்சாரங்களில் ஈடுபட்டு வாக்காளர்களை கவர்ந்து வருகின்றனர்.

அந்தவகையில் உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிடும் பாஜக வேட்பாளரான சீனிவாசன் என்பவர் தனது கண்களை கட்டிக் கொண்டு பிரச்சாரத்தில் ஈடுபட்டுவருகின்றார்.

புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட 22வது வார்டில் பாஜக சார்பில் போட்டியிடும் இவர் ,வாக்காளர்களின் இல்லங்களுக்குச் சென்று , அப்பகுதியில் உள்ள அடிப்படை பிரச்சனைகளை தீர்த்த பிறகுதான் வாக்காளர்களின் முகத்தை பார்பேன் எனக் கூறி பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கண்களை கட்டியதால் தள்ளாடியபடி சென்ற வேட்பாளரை, கட்சி நிர்வாகிகள் கைத்தாங்கலாக அழைத்துச் சென்ற புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மோடி உரையின் சாரம்சம்



■ புதுடெல்லி,

பாராளுமன்ற மக்களவையில் ஜனாதிபதியின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பிரதமர் மோடி மக்களவையில் பேசினார்.

அவர் பேசியதன் முக்கிய அம்சங்கள் வருமாறு: -

# பாடகி லதா மங்கேஷ்கருக்கு அஞ்சலி செலுத்த பிரதமர் மோடி தனது உரையை தொடங்கினார்.

# ஏழைகளின் வங்கி கணக்கில் பணம் நேரடியாக சென்று சேருகிறது.

# ஏழைத்தாய்கள் சமையல் எரிவாயு திட்டம் மூலம் பயன் அடையும் போது மகிழ்ச்சி ஏற்படுகிறது.

# அரசு திட்டங்களின் மூலம் ஏழைகள் வீடு கட்டி லட்சாதிபதிகளாக மாறி வருகின்றனர்

# இன்று ஏழ்மையிலும் நேர்மையாக இருப்பவர்களுக்கு எரிவாயு சிலிண்டர் வசதி கிடைப்பது மகிழ்ச்சி அளிக்கிறது

# நாட்டில் உள்ள ஏழைமக்கள் இன்று எரிவாயு இணைப்பு, கழிவறை வசதிகளை பெற்று வருகின்றனர்.

# துரதிருஷ்டவசமாக சிலர்(எதிர்க்கட்சிகள்) இன்னும் 2014-ஆம் ஆண்டிலேயே உள்ளனர்.

# பல மாநிலங்களில் காங்கிரசை ஆட்சியில் அமரவைக்க மக்கள் விரும்பவில்லை.

# 1962-க்கு பின் தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியால் ஆட்சிக்கு வர முடியவில்லை.

# காங்கிரஸ் கட்சியின் ஆட்சி பல மாநிலங்களில் கைவிட்டு போன பிறகும் கூட அகங்காரம் குறையவில்லை

ஆந்திரா

# முதலமைச்சருக்கு ரோஜா பரிசு



ஆந்திர மாநிலம் நகரி சட்டமன்ற உறுப்பினரும், நடிகையுமான ரோஜா தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை நேற்றைய தினம்(07) சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பின் போது முதலமைச்சர் ஸ்டாலினின் உருவம் பொறிக்கப்பட்ட பட்டுத் துணியொன்றையும் ரோஜா அவரிடம் அன்புப் பரிசாக வழங்கியுள்ளார்.

இதனையடுத்து செய்தியாளர்களைச் சந்தித்த ரோஜா " தமிழக எல்லை பகுதியில் உள்ள நகரி தொகுதியில் உள்ள பல்வேறு பிரச்சனைகள் குறித்து முதலமைச்சரிடம் ஆலோசிக்கப்பட்டது. குறிப்பாக தமிழக எல்லை பகுதியில் உள்ள பாடசாலைகளில் தமிழ் வழி வகுப்புகள் நடத்தப்படுவதால் மாணவர்களுக்கு பாடபுத்தகங்கள் தேவைப்படுகின்றன எனத் தெரிவித்தேன். அதற்கு பாடப்புத்தகங்களை வழங்குவதாக முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தமிழக - ஆந்திர எல்லை பகுதிகளில் நெசவு தொழிலாளர்கள் அதிகம் உள்ளனர். கொரோனா காலத்தில் வேலைவாய்ப்புகள் இல்லாமல் நெசவாளர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அதனால், தமிழகமும் ஆந்திர பகுதியில் உள்ள நெசவாளர்களை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தேன் " என்றார்.





முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

# மேற்கிந்திய தீவுகளை வீழ்த்திய இந்தியா

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் இந்தியா வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், அஹமதாபாத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இந்தியாவின் அணித்தலைவர் றோஹித் ஷர்மா, தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

இந்தியா சார்பாக தீபக் ஹூடா அறிமுகத்தை மேற்கொண்டார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள், மொஹமட் சிராஜ் (1), பிரசீத் கிருஷ்ணா (2), வொஷிங்டன் சுந்தர் (3), யுஸ்வேந்திர சஹாலிடம் (4) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 43.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 176 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில், ஜேஸன் ஹோல்டர் 57 (71), பேபியன் அலென் 29 (43) ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு, 177 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்தியா, றோஹித் ஷர்மாவின் 60 (51), சூரியகுமார் யாதவ்வின் ஆட்டமிழக்காத 34 (36), தீபக் ஹூடா ஆட்டமிழக்காமல் 26 (32), இஷன் கிஷனின் 28 (36) ஓட்டங்களோடு 28 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், அல்ஸாரி ஜோசப் 2, அகீல் ஹொஸைன் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக யுஸ்வேந்திர சஹால் தெரிவாகினார்.



அம்பாறை மாவட்டத்திலுள்ள

# விளையாட்டு கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள்

அஸ்ஹர் இப்றாஹிம்

அம்பாறை மாவட்டத்திலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு 12 இலட்சம் ரூபாய் பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை பகிர்ந்தளிக்கும் நிகழ்வு அண்மையில் அம்பாறை செனரத் சோமரெட்ண விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், வனவிலங்கு பாதுகாப்பு, யானை வேலிகள் மற்றும் அகழிகள், பாதுகாப்பு மற்றும் வன வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக பிரதம அதிதியாக கலந்து கொண்டு மேற்படி விளையாட்டு உபகரணங்களை வழங்கி வைத்தார்.

ஸ்பானிய லா லிகா தொடர்:

# அத்லெட்டிகோவை வீழ்த்திய பார்சிலோனா



ஸ்பானிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகா தொடரில், பார்சிலோனாவின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அத்லெட்டிகோ மட்ரிட்டுடனான போட்டியில் 4-2 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா வென்றது.

பார்சிலோனா சார்பாக, ஜோர்டி அல்பா, கவி, றொனால்ட் அரஜுவோ, டனி அல்விஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். அத்லெட்டிகோ சார்பாக, யனிக் கராஸ்கோ, லூயிஸ் சுவாரஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

அந்தவகையில், லா லிகா புள்ளிகள் பட்டியலில் முதலிடத்தில் 53 புள்ளிகளுடன் றியல் மட்ரிட் உள்ளது. இரண்டாமிடத்தில் 47 புள்ளிகளுடன் செவிய்யாவுடன், மூன்றாமிடத்தில் 40 புள்ளிகளுடன் றியல் பெட்டிஸும், நான்காமிடத்தில் 38 புள்ளிகளுடன் பார்சிலோனா உள்ளது. இதில், பார்சிலோனா ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளது.

தேசங்களுக்கான ஆபிரிக்க கிண்ணம்:

# சம்பியனான செனகல்

கமரூனில் நடைபெற்று வந்த தேசங்களுக்கான ஆபிரிக்க கிண்ணத் தொடரில் செனகல் சம்பியனானது.

நேற்று அதிகாலை நடைபெற்ற எகிப்துடனான இறுதிப் போட்டியில் வென்றே செனகல் சம்பியனாகியிருந்தது.

போட்டியின் வழமையான நேரத்தில் இரண்டு அணிகளும் கோலெதனையும் பெறாததோடு, மேலதிக நேரத்திலும் கோலெதுவும் பெறப்படாத நிலையில், பெனால்டியில் 4-2 என்ற ரீதியில் வென்றே செனகல் சம்பியனாகியிருந்தது.



சீனா

# சீனாவில் தீவிரமடையும் கொரோனா

கடந்த சில வாரங்களாக சீனாவில் கொரோனா பாதிப்பு குறைந்து வந்த நிலையில், தற்போது மீண்டும் தொற்றுப் பரவலானது அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்நாட்டில் தற்போது குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருவதால், கண்காணிப்பு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





இச் சூழலில், சீனாவின் தெற்கு குவாங்சி பிராந்தியத்தில் உள்ள பைஸ் நகரில் தற்போது முழு ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் யாரும் நகரத்தை விட்டு வெளியேற அனுமதிக்கப்பட மாட்டார்கள். சில குறிப்பிட்ட பகுதிகளில் வசிக்கும் மக்கள் வீடுகளை விட்டும் வெளியே வரக் கூடாது என அறிவிக்கப்பட்டுள்ளது. பைஸ் நகரில் கடந்த 3 நாள்களில், 70க்கும் மேற்பட்டோருக்கு கொரோனா கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியா

# எட்டு மாதத்தில் 2 குழந்தைகள்

முதல் குழந்தை பிறந்து எட்டு மாதங்களே ஆன நிலையில் அடுத்த குழந்தையைப் பெண்ணொருவர் பெற்றெடுத்த சம்பவம் பிரித்தானியாவில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

பிரித்தானியாவைச் சேர்ந்த 27 வயதான லூஸி என்பவர், 2020ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் பெண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்துள்ளதோடு எட்டு மாத இடைவெளியில் இரண்டாவது குழந்தையையும் பெற்றெடுத்துள்ளார்.

அவரது முதல் குழந்தை பிறந்து, மூன்று மாதங்களாக அவருக்கு மாதவிடாய் ஏற்படவில்லை எனவும், இது குறித்து மருத்துவரிடம் சென்று பரிசோதனை செய்து பார்த்த போதே அவர் 2 ஆவது முறை



கர்ப்பம் தரித்திருந்தமை தெரியவந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அதிர்ச்சியில் மூழ்கிய லூஸி, வேறு வழியின்றி இரண்டாவது குழந்தையைக் குறை பிரசவத்தில் பெற்று எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவமானது பலரையும் ஆச்சரியப்படுத்தியுள்ள நிலையில், குறித்த குழந்தைகளின் புகைப்படங்களும் இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



பிரித்தானியா

# மார்பகத்துக்காக நிதி திரட்டும் யுவதி

யுவதியொருவர் தனது மார்பகத்தின் அளவை சிறியதாக்க மக்களிடம் நிதி திரட்டிவரும் சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

பிரித்தானியாவின் நார்தாம்ப்டன்ஷையரில் வசித்து வரும் கார்லி ஸ்மார்ட் என்ற 21 வயதான யுவதியே இவ்வாறு தனது மார்பகத்தை சிறிதாக்க நிதி திரட்டி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உணவகமொன்றில் பணிபுரிந்து வரும் குறித்த யுவதி, அவரது சிறுவயது முதலே பெரிய மார்பகங்களால் பல இன்னல்களுக்கு ஆளாகி வந்துள்ளதாகவும், அவர் 17 வயதைக் அடைந்தவுடன் அவரது மார்பகத்தின் அளவு வேகமாக அதிகரிக்கத் தொடங்கியதாகவும், தற்போது அவரது மார்பக எடை மாத்திரம் 9 கிலோ கிராமாக உள்ளதாகவும் இதனால் அவருக்கு மூச்சுத் திணறல், முதுகுவலி ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அவர் பணிபுரியும் இடத்தில் அவரது மார்பகத்தை வைத்து சக ஊழியர்கள் கேலி செய்வதாகவும் இதனால் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாவதாகவும் இதனால், தனது மார்பகத்தை சிறியதாக மாற்ற அறுவை சிகிச்சை செய்ய அவர் முடிவு செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

எனினும், அதற்குறிய மருத்துவ செலவுகள் அதிகமாகக் காணப்படுவதால் பொதுமக்களிடம் நிதி வழங்கி உதவி செய்யுமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தோனேசியா

# பஸ் கட்டுப்பாட்டை இழந்ததால் கோர விபத்து;

## 13 பேர் உயிரிழப்பு

பஸ்ஸொன்று விபத்துக்குள்ளானதில் 13 பேர் உயிரிழந்த சம்பவம் இந்தோனேசியாவில் இடம்பெற்றுள்ளது.

இந்தோனேசியாவின் பந்துல் மாவட்டத்தில்நேற்று முன் தினம் (06) 46 பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ்ஸொன்று, வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் 13 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 8 பேர் படுகாயங்களுக்குள்ளான



நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இச் சம்பவமானது அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பெல்ஜியம்

# அரச ஊழியர்களை அழைத்தால் அபராதம்

வேலை நேரங்களைத் தவிர்த்து, ஏனைய நேரங்களில் அரச ஊழியர்களைத் தொடர்புகொள்ளக் கூடாது என்ற புதிய திட்டத்தை கடந்த முதலாம் திகதி முதல் ஐரோப்பிய நாடான பெல்ஜியம் நடைமுறைப்படுத்தியுள்ளது.

'ரைட்டு டிஸ்கனெக்ட்' என்னும் இந்தத் திட்டத்தின்படி பணி நேரங்களைத் தவிர்த்து மற்ற நேரங்களில் அழைக்கக்கூடாது எனவும் இத்திட்டத்தை தவறான முறையில் ஊழியர்கள் பயன்படுத்தக் கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இவ் உத்தரவை மீறுபவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனா

# ஒலிம்பிக்கில் அலிபாபா

பீஜிங்கில் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வரும் நிலையில், நேற்று முன்தினம் (06) மெய்நிகர் தொழில்நுட்பம் மூலம் ஒலிம்பிக் சபைத் தலைவர் தோமஸ் பேட்ச்சும், அலிபாபா நிறுவனத்தின் தலைமை நிர்வாகி டேனியல் ஜாங்கினும் ஹொலோகிராம் (Hologram) தொழில்நுட்பம் மூலம், ஒருவரை நேரில் சந்தித்து பேசுவது போன்று உணர்வை தரும் தொழில் நுட்பத்தின் மூலம், இருவரும் சந்தித்துக் கொண்டமை உலகளவில் பெரும் பேசுபொருள் ஆகியுள்ளது.

அலிபாபா நிறுவனம் தயாரித்துள்ள 'க்ளவூட் மீ' தொழில்நுட்பம் மூலம் பேசுவதற்கென்று ஒரு சிறிய இடம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில் ஒரு கமெரா மாத்திரம் இருக்கும். அதில் ஒருவர் நின்று பேசி ரெக்கோட் செய்ததும், உடனடியாக 'க்ளவூட் மீ' தொழில்நுட்பம் மூலம் இணையத்திற்கு சென்று விடும். பின்னர் இதை ஒரு திரையில் ஹொலோகிராம் வடிவில் திரையிடப்படுகிறது. கடந்த 2017ஆம் ஆண்டு முதல் ஒலிம்பிக் சபையுடன் அலிபாபா நிறுவனம் இணைந்து செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தாய்லாந்து

# தூதரகத்திலுள்ள பெண்களின் குளியலறையில் இரகசிய கமெராக்கள்

## அதிர்ச்சியில் ஊழியர்கள்

தாய்லாந்தில் உள்ள அவுஸ்திரேலிய தூதரகத்தில் பெண்களின் குளியலறையில், இரகசியமாக கெமராக்கள் பொருத்தப்பட்டிருந்த சம்பவம் அந்நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், இச்சம்பவம் தொடர்பில் அத்தூதரகத்தின் முன்னாள் ஊழியர் ஒருவரை தாய்லாந்துப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இது குறித்து தாய்லாந்தின் வெளிவிவகாரப் பிரிவின் செய்தித் தொடர்பாளர் கருத்துத் தெரிவிக்கையில், "தூதரகத்தில் உள்ள அனைத்து ஊழியர்களின் நலன் மற்றும் தனியுரிமைக்கு எப்போதும் முன்னுரிமை கொடுப்போம். நாங்கள் அவர்களுக்கு தொடர்ந்து தகுந்த ஆதரவை வழங்குகிறோம்" என்றார்.

தூதரகத்தில் பெண்களின் குளியலறையில் கேமராக்கள் எவ்வளவு நேரம் இருந்தன என்பது தெளிவாகத் தெரியவில்லை. கடந்த ஆண்டு இறுதியில், குளியலறையின் தரையில் கேமரா SD கார்ட் கண்டுபிடிக்கப்பட்ட பிறகுதான், அங்கு கேமராக்கள் இருந்த விஷயம் வெளிச்சத்துக்கு வந்ததாக அவுஸ்திரேலியாவின் செய்தி நிறுவனமான ஏபிஸி தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் ஒரு தீவிர பாதுகாப்பு மீறலாகும் என்று அவுஸ்திரேலிய பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கை நிபுணர் தெரிவித்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 08 பெப்ரவரி 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.